International Journal for Development of Science and Technology (IJDST)
Vol. 1, Issue, 17, June 2021 PP.01-15
www.ijdst.com
ISSN: 2456-8503

# ஆடு ஜீவிதம் நாவல் ஓர் ஆய்வு

என். சுகந்தி, அறிஞர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்
முனைவர். ரா. ரீணா, உதவி பேராசிரியர், தமிழ் துறை, திரவியம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி , பெரியகுளம்

**முன்னுரை**

மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது இலக்கியம். சமுதாயப் பிரச்சனைகள் கற்பனை கலந்து இலக்கியங்களாகப் படைக்கின்றவன் படைப்பாளன். இன்றைய இலக்கிய வரலாற்றில் புதின இலக்கயம் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் புதின இலக்கியம் ஓர் உரைநடை காவியமாக கருதப்பட்டது. மனித வாழ்க்கையில் நடைடபெறும் நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு புதின இலக்கியம் வளரத் தொடங்கியதால் மக்களிடம் பெறும் வரவேற்பை பெற்று வளர்ந்து வருகிறது.

ஒவ்வொரு கால கட்டத்தில் தோன்றிய இலக்கியங்கள் அந்தக்கால கட்டத்திற்கே உரிய சமுதாயப் பாதிப்புகளைத் தாங்கி வந்திருக்கின்றன. இன்றைய சமுதாயத்தில் அகம், புறம் சார்ந்த அறிவியல் மாற்றங்கள் எண்ணற்றவை. மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்கள் சமுதாயத்தின் வெளிப்பாடாக அமையும். இவ்வகையில் புதினங்கள் சமுதாய மாற்றங்களை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இந்நாவல் இலக்கியத்தில் ஆடு ஜீவிதம் என்ற நாவலை ஆராயும் வகையில் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

## நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மேலை நாட்டார் வருகையினால் புதினம் இடம்பெற்றுள்ளது. தமிழில் முதல் புதினமாக மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் இடம் பெற்றுள்ளது. அது முதல் இன்றைய நடைமுறை உள்ள தமிழ்ப் புதின வரலாற்றை ஆராயும் முகமாக இந்த இயல் அமைகிறது.

"புதினம் என்னும் பொருளைடய நாவல்**(Novel)** என்னும் சொல்
அதே பொருளைய நாவெல்லா NOVELLA
என்றும் இலத்தின் சொல்லின்றும் ஆங்கிலத்தில்
16 ம் நூற்றாண்டில் புகுந்து 19 ம் நூற்றாண்டில் புதியதாம்
இலக்கிய வகைக்கும் பெயராக கிடைத்து விட்டன."

இலக்கியங்கள் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற சிந்தனையே காலந்தோறும் அதன் மாற்றத்திற்கு முதன்மையான காரணம். எனவேதான் காலப்போக்கில் புதிய வகைகளை உருவாக்கும் முயற்சியிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவே புதின இலக்கியம் ஆகும். சமூகம் மாறுகின்றது என்றால் மாறுகின்ற சமூகத்தினையும் அந்த அவ்வப்போது அடைந்து வரும் மாற்றங்களையும் காட்டத் தவறுவதில்லை என்ற உண்மை தற்காலத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வாழ்க்கையியல் ஒவ்வொரு துறை பற்றியும் புதுப்புது மதிப்பீடுகள் தோன்றின. மனிதன் காலத்தில் மதிப்பை பொருளாதாரத்தில் கணக்கிட தொடங்கினான். இயந்திர சாதனங்கள் வளர வளர அவனின் ஓய்வு நேரம் மிகுதியாயிற்று எனலாம். மேலும் மனிதன் ஓய்வைக் சுவையுணர்வோடு செலவழிக்கக் கற்றுக் கொண்டான் நாவல் இலக்கியங்கள் அவன் தேவையை பெருமளவு பூர்த்தி செய்தன. புதினங்கள் பலவகையாக தோன்றி உலக இலக்கியங்களில் நீங்கா இடம் பெற்றுவிட்டன.

NOVELLSஎன்பது புதின என்று பொருள்படும் இதனைப் பிற்காலத்தில் தமிழில் புதினம், நவீனம் என்று மொழி பெயர்த்து விளக்கினர். மேலும் புதினம் என்ற சொல் விளக்கும் பொருள் என்ன என்பது பற்றி நூற்றுக்கணக்கான விளக்கங்கள் காணக் கிடைக்கின்றன. புதினம் என்ற இலக்கிய வடிவம் புதியது. எனவே பல விளக்கங்கள் புதினம் புதிது விநோதமானது எனவும் புதினம் பற்றிய விளக்கங்களுக்கு புதியது முன்பே அறிந்த அல்லது பயன்படுத்திய எதையும் நினைவு படுத்தாது. மேலும் புதினம் என்பது உண்மையில் புதிது புதிய கதை என்று பொருள்படும் எனவும் மனித வாழ்க்கையைச் சித்தரிப்பதால் புதினம் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கிய வகைகளுள் ஒன்று. போன்ற சான்றுகளும் புதினம் என்பது மனித உணர்வுகள் எண்ணங்கள் செயல்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் உரைநடையில் அமைந்த நீண்ட களம் எனவும் புதினம் என்பது நடைமுறை வாழ்க்கையில் பிரதிபலிப்பாக இருக்கிற பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்ற தேவையான கதைத்திட்டத்தோடு ஒன்று அல்லது இரண்டு பாகமாக அமைந்திருக்கும் உரைநடைக்கதை என்று கூறுவர்.

உரைநடைமுறையில் சான்றுகளை கூறும் போது உரைநடைகதையை கூறும் பாங்கில் அமைந்த மனித வாழ்க்கையின் விளக்கமே நாவல் என்று சான்றுகளை பதிவு செய்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றிய தனிமனிதனின் எண்ணப்பதிவு புதிய சமுதாயத்தை விவரிக்கவும் விளக்கமும் எழுத்து இலக்கிய வடிவமே.
இன்னும் மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைச் சித்தரிக்கின்றது சமுதாய சம்பிரதாயங்களிலிருந்தும், நெறிகளிலிருந்தும், தன்மனிதன் பிறழ்கின்ற பொழுது புனை கதை தோன்றுகிறது என்றும் விளக்கம் தருகின்றனர்.

## கதைக்கருவும் கதையமைப்பும்

ஒரு புதினத்தை திறனாய்வு செய்யும்போது அதன் கதையினைத் திறனாய்வுதான் மிக இன்றியமையாத ஒன்றாகும். அப்போதுதான் அத்திறனாய்வு உன்னதமான நிலையினை அடைய முடியும். இவ்வகையில் இப்புதினத்தின் கதைச்சுருக்கத்தினைக் காணலாம்.

### கதைக்கரு

கதைக்கரு என்பது உயிர்நாடி போன்றது. வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ சொல்லப்படும் கற்பனை நிகழ்ச்சிகளின் தொகுப்பே கதையாகும். ஒரு கதையின் சிறப்புக்கு கதைக்கரு முதன்மையானது. வாசிப்பவரிடம் ஆவலை தூண்டும் வகையில் கதைக்கரு அமைய வேண்டும். கருவின் மூலம் வாழ்க்கைக்கு ஒத்து போகும் நல்ல நிகழ்வுகளை கருவும் இதன் மூலம் சமுதாயத்தின் நிகழ்வுகளைக் கண்ணாடி போல் பிரதிபலிக்க வேண்டும்.

### கருப்பொருள் அறிஞர்கள் கருத்துகள்

வாசகர் படிக்கும் கதைகளிலே காட்சிகளே கதை மாந்தர்களின் பெயர்களிலோ காலப்போக்கில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் அதன் மையக் கருத்து என்னும் வாசகர்களின் மனத்தைவிட்டு நீங்காத அளவிற்குக் கதையின் கருவை அமைக்க வேண்டும். சிறுகதைபடை

டப்பில் நிலைத்த உணர்வுக்குறிய அடிப்படை கருபொருளே உணர்வுகளின் அடிப்படையில் தான் கரு அமைவாதாகப் புலப்படுகின்றது. வாழ்வில் நடக்கும் அனைத்தும் கருவுக்குரியது. இதற்காக எங்கும் தேடி அலைய வேண்டாம். கண்களையும், காதுகளையும் திறந்து கொண்டே இருந்தாலே போதும் இதன் விழித்தம் வாழ்நாளில் நடக்கும் நிகழ்வுகள் அனுபவங்களோடு அமைவதற்கு ஏதுவாக அமைகிறது.

**கதைக்கரு விளக்கம்**

வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கலான விளைவு கதைக்கருவாகும்.அது வரலாற்றிலிருந்து கண்டமைததாக இருக்கலாம். அது நாட்டுக்கதை புராணக் கதைகளிலிருந்து பெற்றதாக இருக்க அன்றாட வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுத்தவோ ஆசிரியரின் சொந்த அனுபவித்திலிருந்து அமையலாம்.

இதன்வழி கதைக்கரு என்பது பற்றிய விளக்கம் புலப்படுகிறது. மேலும் கதைக் கருவை எங்கிருந்து பெறலாம் என்பவற்றுக்குரிய விளக்கமாக கொள்ள முடிகிறது. ஒரு சிறிய விதத்திலிருந்து ( விதை) பெரிய மரம் உருவாவது போல ஒரு சிறிய குருவிலிருந்து ஒரு பெரிய இலக்கியம் தோன்றும். ஆனால் அக்கருவை பயன்படுத்தும் இலக்கியப் படைப்பான புதிய இலக்கியம் படைக்கும். ஆற்றல் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

“அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றவதும்
உரைசால் பத்னியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டலும்”

என்னும் கோள்களாகக் கொண்டு படைக்கப்பட்டதே மிக பெரிய சிலப்பதிகாரம் ஆகும்.

எனவே இதைபெரிதாக இருக்கிறது என்பதை விட அதை ஒரு வரியில் சொல்லக் கூடியதாகவும் ஆழம் நிறைந்தாகவும் இருக்க வேண்டும். கதையை படிக்கும் வாசனை நினைவு படுத்துவதோடு நில்லாமல் அவனைக் கட்டி, எழுப்பி அவன் சிந்தனையைத் தூண்டுவதற்காவும் கதைக்கரு அமையவேண்டும்.

கருவை ஓரிரு வாக்கியங்களில் சொல்லி வைக்காமல் ஓரீரு சொற்களிலும் சொல்லிவிடுவோம். அது ஏதாவது ஒரு கருத்தை புலப்படுத்துவதாக நிகழ்ச்சியை கூறுவதாக மேலும் இதுவே சிறந்த படைப்பாக அமைந்து விளங்கும் என்பதில் வியப்பில்லை. கதை உருவானது யதார்த்தமனாதகாவும் இயற்கையாகவும் அமைதல் வேண்டும் நம்பகத்தன்மை கொண்ட இயல்பானதாக இருப்பதே நல்ல கருவாகும் என்பது புலப்படுகிறது.

**கதைக் கருவின் சிறப்பு**

கதை மாந்தர் புனையைக் காட்டிலும் கதைக்கு சிறப்பாக அமைதல் நல்லது சில கதைகளில் கதை மாந்தரின் பண்பு சிறந்து நிற்கும் வேறு சில கதைகளில் உணர்ச்சி, சிறப்புற்று இருக்கும் கதைகளின் கரு மிக சிறப்பாக அமைந்த சிறுகதைகள் படிப்பவரின் நெஞ்சில் நீங்காமல் நிற்பவையாகும் என்று கூறுகிறார்கள்.

**கதைக்கரு தேர்வு முறை**

எவரால் எந்த ஒரு கருத்து எழுதப்பட்டாலும், பேசபட்டாலும் அதற்கு கரு தேவைப்படுகிறது. எளிய கருத்துகளுக்கு கரு எது வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் இலக்கிய கருத்துகளை விளக்கும் கருவுடையதாக அமைய வேண்டும். இலக்கிய கருத்துக்களைக் கூறி மக்களின் மனங்களளை கூறவும் மகிழ்ச்சி படுத்தவும் வேண்டுமெனில் அதற்கெனத் தேர்ந்தெடுக்கபடுகின்ற கரு மிகமிக வலுவுடையதாக இருக்க வேண்டும் என்ற கருத்து சிந்தனைக்கு உரியது ஆகும்.

**கதைக்கு அமைப்பு**

புதினம் சிறுகதை காப்பியம் நாபகம் என இவற்றுள் எந்த வகை இருந்தாலும் கரு என்பது அவசியமாகும். கருவானது கதையில் முழுப்பொருளாகவும் சில சமயங்களில் ஆசிரியர் கருவினை தெளிவாகவும் கூறுவர் சில சமயங்களில் அது சிறுகதை கண் குறிப்பாக உணர்த்தப்படும் கருவே கதையின் கருத்து அல்லது செயல் நோக்கத்தைத் தருகிறது எனலாம். மேலும் ஒரு கதையில் கரு உருவபெறவேண்டியது உண்மைக் காதலின் வெற்றியதான் பின் புனித தன்மை நாட்டுபற்று துன்ப நிலையிலும் மனத் தளராமை ஒரு கொள்கையின் பொருட்டுதுறவு கொள்ளுதல் சமயம் அளிக்கும் ஆன்ம அமைதி தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் விடா முயற்சியினால் வெற்றி பெறுதல் இன்னோரான்னவை மரபாக கொள்ளப்பெற்று வரும் என்பது புலப்படுகிறது.

**கருவின் ஒருங்கிணைந்த தன்மை**

கதையில் கருவிற்கு எதுவும் செய்யப்படாத நிலையில் முன்பே அது கூறப்படாத வகையில் பிரதிபலிக்கும் உருவமாய் ஓவியமாக்கப்பட்ட மனிதனாய் உயிர் வாழும் இரு மனிதர்களின் ஒத்த தன்மை போல் இருக்க வேண்டும் என்னும் கதையின் ஒத்தத்தன்மை பற்றிய செய்திகள் புலப்படுகிறது.

**ஆடு ஜீவிதம் புதினத்தின் கதைக்கரு**

பென்யாமின் எடுத்துக்கொண்ட கருவை மேலோட்டமாக விரிவுப்படுத்தி எழுதாமல் அதன் உள்ளே புகுந்து புறப்பட்டு வந்திருக்கிறார் ஆசிரியர். இதற்காக நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார். நாவலாசிரியர் அந்த உண்மையான உழைப்பு நல்ல பலன் அளித்திருக்கிறது என்பதை நாவல் பெற்ற வெற்றியே சாட்சி. இவற்றின் அடிப்படையில் தமிழில் ஒரு புதிய கருப்பொருளாகச் சமூக சிந்தனையோடு அனுகிய புதிய நோக்கில் கதைக்கருவை அமைத்திருக்கிறார்.

**ஆடு ஜீவிதம் என்ற புதினத்தில் கதைக்கருவாக**

இக்கதைகருவானது அந்த நாள்களுக்குள், “வயிற்றுப் பிழைப்புக்காக வீட்டையும் நாட்டையும் பிரிந்து, விதியின் அலட்சியத்தால் சுட்டெரிக்கும் பாலைவனத்துக்குள் சென்று அகப்பட்டுக்கொண்டவனின் கதையை மையமாக கொண்டது.”

மனிதச் சுவடுகளை முற்றிலுமாக பறிகொடுத்துவிட்டு, ஒரு முரட்டு அரபியின் ஆட்டுக்கிடைக்குள் மாட்டிக்கொண்ட ஒரு மனித ஆட்டின் இந்த அனுபவக்கதை என்னை முற்றிலும் புதிய ஒரு உலகத்துக்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டது. அந்த அனுபவத்தின் தமிழ் வடிவம்தான் இந்தக்கதை.

பொதுவாக நமக்கு பாலைவனத்துடனான தொடர்பு மிகக்குறைவு தான். கடல் அனுபவங்களைப்பற்றியும், கானகப் பயணங்களைக் குறித்தும் தமிழில் படிக்கக் கிடைக்கின்றன. ஆனால் வெம்மை தகிக்கும் வறண்ட பாலைவன அனுபவங்களைக் கூறும் நூல்கள் தமிழில் குறைவே. (சங்க இலக்கியங்களின் பாலைத்திணை குறித்த பாடல்களைச் சொல்லவில்லை.)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் திணைப் பாகுபாட்டில் கடைசியாக வரும் பாலை செழிப்பான தமிழ்ப் பரப்பில் தன்னை முழுமையாக வெளிப்படுத்த அதிகம் வாய்ப்பில்லை. மட்டுமல்ல, அண்டை வீட்டு மலையாளிகளைப் போல் தமிழருக்கு பாலைவனப் பரப்பான வளைகுடாவுன் அத்தனை நெருக்கமும் இல்லை. புதினத்தில் மாந்தர் படைப்பு என்பது ஓர் அரிய கலை புதினத்தில் மட்டுமின்றி சிறுகதை போன்றவற்றிலும் மாந்தர்கள் முதன்மை பங்கு வகிக்கின்றனர். புதினத்தின் சிறப்பான வெற்றிக் மாந்தர் படைப்பும் ஒரு காரணமாக அமைகின்றது. வாசகர்களின் நெஞ்சில் நிலைத்து நிற்பது மாந்தர் படைப்பே ஆகும்.

**கதை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்**

ஒரு புதினத்தின் கதை,கதைபின்னல்,சூழல் ஆசிரியரின் மொழிநடை இவற்றைப் படிப்பவர்களின் மனத்தில் நிலைத்து நிற்க மனத்தில் நிலைத்து நிற்க வைப்பது மாந்தர் படைப்பாகும். "மாந்தர்கள் வாழும் உலகில் நம்மைப் போல தலை நிமிர்ந்து நிற்பவர்களாக இருத்தல் வேண்டும். மாந்தர்கள் என்பதை மறந்து நாம் அவர்களிடம் அன்பு காட்டவும், வெறுப்பு காட்டவும் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்." என்கிறார் அ.ச. ஞான சம்பந்தன். இதை மாந்தர் இன்றிப் புதினம் இல்லை. அந்தக் கதை மாந்தர் எந்த அளவிற்கு வாழ்வில் உண்மையுடன் கூறியுள்ளார் என்பதிலேயே ஒரு புதினத்தின் வெற்றி அடங்கியுள்ளது என்கிற தண்டாயுதம் கூறுகின்றனர்.

"புதினத்தின் வேறு எந்தக் கூறுகளையும் விட புதினங்களில் மாந்தர் படைப்பே நம் கவனத்திற்கு, கணிப்பிற்கும் உடையாதாகிறது" என்பார் மா. இராமலிங்கம். "உலக அரங்கில் புகழ்பெற்ற புதினங்கள் அனைத்தும் மாந்தர் படைப்பில் சிறந்த வெற்றியை பெற்றவை ஆகும். இதற்கு காரணம் அந்தப் புதின ஆசிரியர்களின் படைப்பாளுமைத் திறனோக்கும்"என்று ஏ.என். நல்லபெருமாள் கூறுகின்றார். கதை நிகழ்ச்சிக்கும் மாந்தருக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். அவை ஒன்றையொன்று தீர்மானிப்பதாக அமையவேண்டும். ஒரு மாந்தரின் குணநலன் ஆசிரியர் நேரிடையாக கூறுதலை விட அதனை அதனின் செயலில் உரையாடல் மூலம் நாடகப்படுத்தி காட்டலே சிறப்பாகும் எனலாம்.

**படைப்பு விளக்கம்**

கதை நகர்த்தி செல்வதற்கு மாந்தர்கள் அவசியமாகின்றனர். மாந்தர்கள் சிறப்புற அமைவதற்கு பல நிலைகளைக் கூர்ந்து நோக்கி அமைக்க வேண்டியது அவசியமாகும். பாத்திர படைப்பு என்பது எழுத்தாளர்களின் முழுத்திறமைகளையும் உள்ளடக்கியது பெயர் சூட்டி அங்க வருணை செய்து விடுவதோடு முடிந்துவிடுவதில்லை. மனம், அறிவு, சிந்தனை, குண இயல்பு சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவை எல்லாவற்றையும் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளிப்படுவதை தீட்டுவதில் தான் சிறக்கின்றது என்பது இவண் சிந்திக்கதக்கதாகும்.

**படைப்பின் சிறப்புத் தன்மை**

"உண்மை நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுகின்ற பொழுதுதான் அந்த மாந்தர் சிறப்பு தன்மை அடைகிறது. கதையினை தரமுடையதாகவும், பயனுடையதாகவும் செய்வது மாந்தர் படைப்பேயாகும். நாம் படித்த கதையின் கருவையும் கதைக் கோப்பையும் நாளடைவில் மறந்துவிடுவோம். ஆனால் அதன் பாத்திரங்கள் படிப்போர் நெஞ்சில் நிலையாக இருக்கும்" என்பது தாரா. ஞானமூர்த்தியின் கருத்தாகும் இது மாந்தர் படைப்பின் சிறப்பை புலப்படுத்துவதாக உள்ளது.

**படைப்பு அறிஞர் கருத்துகள்**

"எழுத்தாளர்கள் எப்பொழுதுமே மூலத்தை பிரதிசெய்வதில்லை தான் ஒன்றை காணுகின்றபோது தன்னுடைய கவனத்தை கூர்ந்த சிலவற்றையும் கற்பனையில் மின்னலிட்ட சிலவற்றையும் ஒன்றாக சேர்த்தே பாத்திரத்தை உருவாக்குகிறார்கள். தன்னுடைய படைப்பு முழுக்க முழுக்க மூலத்தைப் போலவே இருக்க வேண்டும்"என்று அதிகமாக கவலைப்படுவதில்லை.மா. இராமலிங்கம் நான் என் பாத்திரங்களை கட்டுபடுத்துவதில்லைநான் அவர்களுக்கே கட்டுபட விடுகிறேன் அவர்கள் விரும்பிய வண்ணம் என்னை அழைத்து செல்கின்றனர் என்று தாக்கரே என்ற அறிஞர் பாத்திரம் பற்றிய சிந்தனைகளை சொல்கிறார்.

"ஒரு கதையை சொல்லாமலேகூட ஒரு பாத்திரத்தை வெற்றிகரமாகப் படைத்து காட்ட முடியும். ஆனால் பாத்திரங்களை நல்ல முறையில் உருவாக்கி காட்டாமல் ஒரு கதையைச் சொல்ல வழியில்லை" என்பது கா. பிரபாவதி என்பவர் தரும் கூற்றாகும். எனவே மாந்தர்கள் கற்பனையாகவும் ஈடுபாட்டுடனும் சிறப்பாகவும் ஒரு படைப்பில் அமைய வேண்டும் என்பது புலனாகும் கருத்தாகும்.

**படைப்பின் முறைகள்**

புதினங்களில் மாந்தர் படைப்பை ஆராய்ந்தால் அவை இருவகைகளில் படைக்க பெறுவதை அறியலாம்.

1. நேர்முக முறை
2. நாடக முறை

**நேர்முக முறை**

நாவலாசிரியர் கதையை நேராக கூறாமல் பிறர் வாயிலாக உணர்த்தும் வகை நேர்முக முறை எனலாம். அப்பாத்திரங்களை உணர்ச்சிகள், உள்நோக்கங்கள், எண்ணங்கள் மனநிலைகள், ஆகியவைகள் அவர் பாகுபடுத்தி விளக்கி பற்றிதரும் கருத்துகளையும் மதிப்பீட்டையும் தெரிவிப்பார் என்பது சிந்திக்க தக்கன இது நேர்முக முறையில் அடங்கும்.

**நாடக முறை**

ஆசிரியர்கள் பாடங்களை விளக்குவதில்லை. பாத்திரங்கள் தம் பேச்சாலும் செயலாலும் உருவாகி பழக்கி பெற்றுவிடும் இதோடு கதையும் மற்ற பாத்திரங்கள் அவைகளைப்பற்றி வெளியிடும் கருத்துகளும், மதிப்பீடுகளும் அவைகளின் படைப்பிற்கு மேலும் துணையாக அமையும். இது நாடக முறை உத்தியின் அங்கம் எனலாம்.

**இருவகை கதாப்பாத்திரம்**

கதை மாந்தர்களின் பண்பு நலன்களையொட்டி ஒரு வகைப்படுத்தலாம்.

1. குறிக்கோள் கதாப்பாத்திரம்
2. நடப்பியல் கதாப்பாத்திரம்

குறிக்கோள் மாந்தர் புதினத்தின் தொடக்கத்தில் எப்படி தோன்றினார்கள் அப்படியே அவ்வமைப்பில் மாறாமல் புதினம் நிறைவுறும் வகையில் அப்படியே இருப்பர். அவர்களிடத்தில் எவ்வித வளர்ச்சியோ மாற்றமோ இருக்காது.

**மாந்தர்களை பின்வரும் பொருள்களின் வகைப்படுத்துவர் அறிஞர்**

1. புறத்தோற்றம்
2. இயக்கம் உணர்ச்சிகுறிப்பு நடத்தைப் பழக்கம்
3. மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் முறை
4. பேச்சு முறை
5. தனக்கு தானே நடந்து கொள்ளும் முறை
6. சூழல் அமைவின் தாக்கம்
7. மாந்தரின் கடந்த கால வாழ்க்கை
8. மனப்போராட்டம்
9. பாத்திரத்தின் பெயரமெதிலும் அணி வகை தரும்

**இலக்கண இலக்கியங்களில் மாந்தர் படைப்புகள்**

மாந்தர்கள் பற்றிய வித்தையத் தொல்காப்பியர் பொருள் அதிகாரத்தில் விளக்குகிறார். தலைவன், தலைவி, பாங்கன், தோழி, நற்றாய், செவிலி, கானமக்கிழத்தி, அறிவர் கூத்தா, விறலியர், பாணன், பழனி, இளையோர் பார்ப்பார் ஆகியோர் தொல்காப்பியர் மாந்தர்களாகும்.

"அச்சமும் காணும் மடனுமுந் துறந்த
திச்சமும் பெண்பாற்குள் என்பர் "

எனும் நூற்பாவின் மூலம் இலக்கணம் வகுத்துள்ளார் தொல்காப்பியர் நாடக பாங்கில் அமைக்கப்பெறும் மாந்தர்கள் இல்லையேல் காப்பியம் வெறும் வியப்பார்ந்த கதையாகிவிடும் காப்பியத்தில் பல வகை திறனும் வாழ்க்கை உண்மையிலும் அதன் மாந்தர்கள் ஒன்றோடொன்று சந்திப்பதானல் தோன்றும் நாடகத்திலேயே காண

முடியும் என்று குறிப்பிடுவதாக எடுத்துக்காட்டுவார் த. ஞான மூர்த்தி எனலாம்.
புனை கதைகளில் கதை மாந்தர்களைப் படைப்பாளிகள் படைக்கும் பொழுது மாந்தர்களுடனே ஒன்றி விடுகின்றனர். இதனை என் கதை மாந்தர்களை நான் எப்போதும் நேசிக்கிறேன் அவர்கள் எவ்வளவு குறைபாடு உடையவர்களாக இருந்தாலும் நான் அவர்களை விரும்புகிறேன் அவர்கள் என் உணர்ச்சியில் பிறந்தவர்கள் என்று அகிலன் குறிப்பிடுவது. கீழ்காணும் முறைகளில் மாந்தர் படைப்புகள் ஆராயப்படுகின்றன.

1. முதன்மை மாந்தர்கள்
2. துணை மாந்தர்கள்
3. பெயர் குறிக்கப் பெறாத மாந்தர்கள்
4. பிற மாந்தர்கள்

**முதன்மை மாந்தர் பங்கு என்ன நிலை**

"முதன்மை கதை மாந்தரே கதை கூறும் நோக்கு நிலை என்னும் முறை எல்லைக்குட்பட்ட நோக்கு நிலையில் சிறப்புடையதாகும். முதன்மை மாந்தரின் மென்மையான உள்ள உணர்ச்சிகளையும் அவற்றால் உண்டாகும் போராட்டத்தையும் படம் பிடித்து காட்ட பொருத்தமாகவும், வசதியாகவும் அமைவது அந்த நோக்க நிலை ஆகும்" என்பார் த. திருநாவுக்கரசு முதன்மை மாந்தரின் புதினத்தின் முதுகெலும்பாகும். ஏற்ப ஊருக்குள் ஒரு புரட்சி என்ற புதினத்தின் ஆண்டியப்பனை முதன்மை மாந்தராகக்கொண்டு நாவலாசிரியர் கதையை வடிவமைத்துள்ளார்.

**கதை சுருக்கம்**

"ரியாத் ஏர்போர்ட்டிலிருந்து அர்பாபுடன் பிக் –அப் வேனில் ஏறிப்போகும் நஜீப், நம்மையும் கூடவே இழுத்துச் சென்றுவிடுகிறான். திக்கு தெரியாத வெட்டவெளி பாலைவனத்தில், ஆடுகளுடன் ஆடாக (ஆட்டுக்காவது சந்தை மதிப்புண்டு) வாழும் நிலைக்கு தள்ளப்பட்ட நஜீப், தனது வேதனைகளையும், துயரங்களையும் நம்மிடம் பகிர்ந்துகொள்ளும் அதேவேளையில், அற்புதமான வாழ்க்கைப் பாடத்தை மெல்லிய நகைச்சுவை இழையோட நமக்கு கற்றுத் தருகிறான்."
பத்தா நகரத்திலிருந்த அந்த சின்னஞ்சிறிய போலீஸ் ஸ்டேஷனின் முன்னால் தோற்றவர்களைப்போல நின்று கொண்டிருந்தோம் நானும் ஹமீதும். வாசல் கேட்டோடு சேர்ந்திருந்த கூண்டுக்குள் இரண்டு போலீஸ்காரர்கள். ஒருத்தன் எதையோ படித்துக்கொண்டிருக்கிறான். மற்றொருவன் தொலைப்பேசிக் கொண்டிருந்தான். நாங்கள் இருவரும் அருகருகே இருந்தபோதிலும் அவர்களிவரும் வேறு வேறு உலகத்தில் இருந்தார்கள். அந்த இரண்டு உலகமுமே எங்களைப் பொருட்படுத்தவில்லை.
அந்த இரண்டு பாராக்காரர்களின் யாரேனும் ஒருவனாவது எங்களைப் பார்த்துவிட மாட்டானா என்னும் ஏக்கத்துடன். காலையிலிருந்து அப்படியே இருந்ததால் ஏற்பட்ட முதுகு வலியையும் பொருட்படுத்தாமல் நாங்கள் அங்கேயே உட்கார்ந்திருந்தோம். ஆனால் ஏமாற்றத்துடன் நாங்கள் மீண்டும் மரத்தடிக்கே திரும்பினோம்.

ஒரு நாள் எப்படியாவது எங்களை கவனிக்கட்டும் என்ற முடிவுடன், ஒரு போலீஸ்காரரின் காலில் இடறி கீழே விழுவது போல் பாசாங்கு கூட செய்து பார்த்தேன். ஆனால் அவனோ என்னிடம் விசாரணை நடத்துவதற்குப் பதிலாக என்னை கைதூக்கிவிட்டு, அல்லாஹுவின் திருநாமத்திடம் மன்னிப்புக் கேட்டபடியே எனக்கு ஆறுதலும் சொல்லி அனுப்பி வைத்தான். நாம் விரும்பும்போது துரதிர்ஷடம் கூட நம்மை வந்து சேரத்தயங்குகிறது. உண்மையிலேயே இது பரிதாபகரமானதுதான்.

ஒவ்வொரு முகத்திலும் தன் பார்வையை படரவிட்டபடியே அர்பாபு மெதுவாக முன்னோக்கி வருகிறான். அவன் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போது என் இதயம் மார்புக் கூட்டிலிருந்து வெளியேறி மூச்சுக் குழாயில் வந்து அடைத்தது.
இனி மீண்டுமொரு மஸரா வாழ்க்கையா? என்னால் அதை கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. வேண்டாம்.. என்னால் தாங்க முடியாது. என் மீது கருணை காட்டுங்கள் இறைவா என் மனம் வெந்து துடித்தது.

ஆனாலும் ஹமீதைப் போல் நான் வாய்விட்டு கதறவில்லை. என் முழு தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு, அர்பாபு என் அருகில் வரும் அந்த கணத்தை எதிர்பார்த்தபடியே நின்று கொண்டிருந்தேன்.
விளிம்புநிலை மனதர்களுக்க நஜீபின் வாழக்கை ஒரு அனுபவப் பாடமாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

**நாவலின் அமைப்பு முறை**

கண்ணால் கண்டு காதால் கேட்டு தீர விசாரித்த தெளிந்த நிகழ்ச்சிகளுடன் ஒரு சிலவற்றின் ஒட்டு மொத்தமான உருவமே இந்த நாவல் நிலப்பிரபுத்துவத்தின் ஆணையும் முதலாளிதுவத்தின் கபடமும் அரசாங்க யந்திர வாதிகளின் ஏனோதானோ போக்குகளும் கிராமங்களில் இப்போது நடைபெறும் நவீன சுரண்டலின் ஒருங்கிணைந்த மையமாக இருப்பதையும் ஏழைகள் கோழைகளாய் இருக்கும் வரை ஏய்ப்பவர்கள்தான் மேய்ப்பவர்காள இருப்பார்கள் என்பதையும் நினைக்கிறேன்.

முற்போக்கு இயக்கவாதிகள் இதை வரவேற்பார்கள் என்று கூறுவதைவிட இந்த நாவலை வரவேற்பவர்கள் தான் முற்போக்கு இலக்கவாதிகளாக இருக்கமுடியும் என்று சொல்லத் தோன்றுகிறது. நாவலின் முடிவு ஓரளவு மிகையானது என்பதை அறிவேன். அந்த விடியலை உணராத மக்களின் தூக்கத்தை கலைக்கும் சேவவொளியாக இந்த நாவல் ஒளிக்கும் என்று பிரக்ஞை பாதிப்பு அடிமான வருடல்,தேடல் என்பன போன்ற இலக்கிய ஜாலங்களையும் போட்டு கௌதம முனிவரை திசை திருப்பும் இந்திர சேவல்ல இது விடியு முன்னாலே கண்விழித்து காடு கழனிக்குச் சென்று கடுமையாய் உழைத்தும் விடிவு காணாத ஏழையினத்தின் நெற்றிக் கண்ணைத் திறக்கக் கூவும் வெற்றிச் சேவல் இந்த நாவல் என்று மனதார நம்புகிறேன்.

அந்த பாத்திரங்களே என்னை படைப்பாளியாக்கின என்று சொல்லலாம். இது பலமா அல்லது பலவீனமா என்பதை வாசகர்கள் தான் தீர்மானிக்கவேண்டும். ஆரம்பத்தில் என்னால் படைக்கப்பட்ட இந்த பாத்திரங்களே பின்னர் எனக்கு எப்படி எழுதவேண்டும் என்று உத்தரவிட்டன. பாத்திரங்களுக்கே ஒரு பாத்திரமானேன் என்றாலும் எந்தக் கட்டத்திலும் யாதர்த்தத்தை மறைக்கவில்லை காரணம் இந்த பாத்திரங்கள் கிராமங்களில் பல்வேறு மனித வடிவங்களாக நிற்கின்றன. இந்த நாவலின் இறுதி கட்டத்தில் ஓரளவு பிரச்சார வாடை வீசுவது போல் ஒரு கருத்து தோன்றியது. எனக்கு அது சரியெனபட்டது. பாத்திரங்கள் தங்கள் கொள்கைகளைச் செயலாக்கும்போது அவை பேச வேண்டுமா என்ற நியாமான சந்தேகம் வலுப்பெற்று நான் பேச்சை குறைக்க பேனாவை எடுத்தப்போது நாவலின் ஆன்மாவே இதுதான் இது பிரசாரம் அல்ல. எதை சொல்வதற்காக நாவல் எழுதினீர்களோ அதுதான் இது என்றனர் கவிஞர்கள்.

**பாத்திரப்படைப்பு**

பழம்பெருமை வாய்ந்த தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது நாவல் இலக்கியமாகும். தொன்றுதொட்டு பல அறிஞர்களால் சிறந்த சமுதாயத்தினையும், வாழ்க்கை முறையினையும்

எடுத்துக்காட்டும் நோக்கில் நாவல்கள் அமைகின்றன. அவ்வாறு அமைந்த நாவல்களுள் பல விருதுகளைப் பெற்று விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் பென்யாமின் ஆடு ஜீவிதம் என்ற நாவலில் இடம் பெற்றுள்ள பாத்திரங்களின் படைப்புத்திறன் பற்றியும் இவ்வியல் ஆராய்கிறது.

நாவலுக்கு மிகவும் இன்றியமையாதவையாக அமைவது பொருத்தமான பாத்திரங்களாகும். தொல்காப்பியம் அகத்திணைப் பாத்திரங்களாக தலைவன், தலைவி, பாங்கன், தோழி, நற்றாய், செவிலி, காமக்கிழத்தி அறிவன், கூத்தர், விறலியர், பாணன், பாடினி, இளையர், பார்பர் என்று குறிப்பிடுகிறது.

"நாவலாசிரியர் அவர் அறிந்த, உணர்ந்த, அனுபவித்துக் கற்பனை செய்த வாழ்க்கையை அவரது கண்ணோட்டத்தின் படி நாவலுக்கான கலை வடிவத்தின் வாயிலாக வெளிப்படுத்துவது நாவலாகும்."

அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் மனிதர்களுடைய பண்பியல்புகளையும், செயல்பாடுகளையும் ஒரு படைப்பாளி தனது கற்பனையில் முகிழ்தெழும் மாந்தர்களின் மீது ஏற்றுவித்து படைப்பில் உலவ விடுகிறான்.

"எழுத்தாளர் மனித உணர்வுகளை தன்னை விட பிறரின் மூலம் நன்கு அறிந்திருக்கிறார். அவருடைய கண்களே ஊடுருவிச் செல்லும் எக்ஸ் கதிர் போன்றவை என்று ஒரு வாசகன் கருதுகிறான்."

மனிதப் பண்புகளை உருவகப்படுத்திப் பாத்திரப் படைப்புகளை உண்டாக்கி நடமாட விடுகிறார்கள். இலக்கியக் கர்த்தாக்கள் நமக்கெல்லாம் அதிகம் போனால் நூறு வயது வரை வாழலாம். ஆனால் இலக்கிய மனிதர்களுக்கு வயதே இல்லை. என்கிறார் பாலதண்டாயுதம்.

"நாம் படித்தக் கதையின் கருவையும் கதைக் கோப்பையும் மறந்து விடுகிறோம். ஆனால் அதன் பாத்திரங்கள் நம் நெஞ்சில் நிலையாக இருக்கும்" என தா.ஏ. ஞானமூர்த்தி கூறுகிறார்.

ஒரு கதையைச் சொல்லாமல் கூட பாத்திரத்தை வெற்றிகரமாகப் படைத்துக்காட்ட முடியும். ஆனால், பாத்திரங்களை நல்ல முறையில் உருவாக்கிக் காட்டாமல் ஒரு கதையைச் சொல்ல வழியில்லை இப்பாத்திரங்கள் மெய்யானவை என்று காட்டும் வகையில் தான் கதையின் வெற்றி அடங்கியுள்ளது என்பார் வில்லிகாலின்ஸ்.

"பாத்திரப்படைப்பு புதினங்களுக்கும் பெருங்காப்பியங்களுக்கும் ஒரு அணியாகும். இவை இரண்டிற்கும் மதிப்பைத் தேடித்தரும் ஒரு கருவியாகும்" என க.கைலாசபதி குறிப்பிடுகிறார்.

**பாத்திரப் படைப்பின் வகை**

உடனடியாக நாம் யாரை அறிந்து கொள்ள வேண்டும் என்று படைப்பாளன் விரும்புகின்றானோ அவரைப் பற்றி ஒரு புதிய வார்ப்பாக உருவாக்கிட உதவும் கலையே பாத்திரப் படைப்பு ஆகும்.

1. முதன்மைப் பாத்திரங்கள்
2. துணைப் பாத்திரங்கள்
3. எதிர்நிலைப் பாத்திரங்கள்

**முதன்மை பாத்திரம்**

இக்கதையின் முதன்மைபாத்திரங்களான வயிற்றுப் பிழைப்புக்காக வீட்டையும் நாட்டையும் பிரிந்து, விதியின் அலட்சியத்தால் சுட்டெரிக்கும் பாலைவனத்துக்குள் சென்று அகப்பட்டுக் கொண்ட இந்த கதையின் நாயகன் நஜீப், ஹமீதும் இவர்கள் இருவரும் தன் சொந்த நாட்டை விட்டு வேலைக்காக வெளிநாடு செல்கிறார்கள். அங்கு அவர்கள் ஏமாற்றப்பட்டு ஜெயில் தண்டனை மற்றும் அடிமையாக வேலை செய்கிறார்கள். இவ்வாறு அவர்கள் படும்துயரத்தை முதன்மைப் பாத்திரங்கள் எடுத்துரைக்கின்றது.

"விசா வந்த விபரத்தைச் சொல்ல கருவாற்றக்கார நண்பனைப் பார்க்க போனபோதுதான் தெரிந்தது. தனுவச்சபுரத்தை சேர்ந்த வேறொரு பையனுக்கும் என்னைப் போலவே விசா வந்திருக்கிறதென்று அதே மச்சான் மூலமாக இரண்டு பேருக்குமே ஒரே கம்பெனிதான். வெளியுலகமே தெரியாதே, இருவரும் சேர்ந்து போவதும் நல்லதுதான்."நாங்கள் இருவரும் காயங்குளத்திலிருந்து ஜெயந்தி ஜனதாவில் புறப்பட்டோம். அப்போது தான் இன்னமும் மீசை கூட அரும்பாத மெலிந்த அந்த பையனைப் பார்த்தேன். பெயர் ஹக்கீம்.

'தம்பி! இவன் இதுவர வெளியிலெங்கேயும் போனதில்ல. உங்க கூடத்தான் அனுப்புறோம். கவனமா பாத்துக்கப்பா' ஹக்கீமின் உம்மா ஜன்னல் வழியாக உற்றுப்பார்த்து அழுதாள். அவனோ கவலைகள் எதுவுமேயில்லாமல் மகிழ்ச்சியுடன் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

**துணைமைப் பாத்திரங்கள்**

**ஸ்பான்ஸர் வருகை**

எங்களுடைய ஸ்பான்ஸர் ரியாத் விமான நிலைத்தில் எங்களுக்காகாத்துக் கொண்டிருப்பார் என்றுதான் பம்பாய் ஏஜென்சியில் சொலியிந்தார்கள். எங்களுடைய விமானம் ஒரு மணி நேரம் தாமதமாகத்தான் ரியாத் வந்து சேர்ந்தது. அதற்குள் ஏர்போர்ட்டில் காத்திருந்த எங்கள் ஸ்பான்ஸர், எங்களைக் காணாமல் திரும்பிக் போயிருப்பாரோ? இல்லை எங்களைத்தேடி இந்த ஏர்பபோர்ட்டுக்குள்ளேயே அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருக்கிறாரோ? ஒன்றுமே தெரியவில்லையே...!

"அறிமுகமில்லாத அந்த மனிதரிடமிருந்துதான் நான் முதல் முதலாக அந்த அரபிச் சொல்லைக்கேட்டேன் – அர்பாபு. அர்பாபு! அர்பாவு! என் மனதுக்குள் அந்த சொல்லை நான் பல தடவை சொல்லிப் பார்த்தேன். கேட்பதற்கே மிக இனிமையாக இருக்கிறதே? யார் அந்த அர்பாபு? அவர் எப்படி இருப்பார்? என்ன செய்கிறார்? எப்படியிருந்தாலும் அந்த அர்பாபு வந்தால்தான் எங்களால் போக முடியும்."

ஐயா அர்பாபு! நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள் வேகமாக வாருங்கள் எத்தனை நேரமாகத்தான் நாங்கள் இங்கேயே காத்துக் கொண்டிருப்பது, வாருங்கள். இந்த இருட்டிலிருந்து எங்களை வெளியே கூட்டிக்கொண்டு போங்கள். இரண்டு மணி நேரத்துக்கும் மேலாகியிருக்க வேண்டும். கையில் கிடந்த ஒரே வாட்சையும் கழற்றி சகியிடம் கொடுத்துவிட்டு வந்திருந்ததால் நேரம் என்ன என்று சரியாகத் தெரியவில்லை. விமான நிலையத்தை ஒரு சுற்று சுற்றி மணி பார்க்கலாம் என்றால் அதற்கும் தைரியம் இல்லை.

நாங்கள் ஒரு பக்கம் போக. அர்பாபு இந்தப் பக்கம் வந்துவிட்டால் என்ன செய்வது? விமான நிலையத்துக்கு வெளியே நகரம் இரவுக்குள் பிரகாசிக்கத் தொடங்கியது. எங்களுக்குள் மெல்லிய நடுக்கம் பரவ ஆரம்பித்தது. வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு ஓர் அரபி அதிலிருந்து வெளியே குதித்தான். ஏனோ தெரியவில்லை அவனைப் பார்த்ததும் நாங்கள் காத்துக்கொண்டிஐந்த அர்பாபு இவர்தான் என்று என் உள்ளுணர்வு சொன்னது. அப்துல்லா என் பக்கமாக கை நீட்டிக் கேட்டான் அவன். இல்லையென்று நான் தலையாட்டினேன்.

எங்களைப் போலவே தனியாக நிற்பவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பாஸ்போர்ட்டை வாங்கி பரிசோதித்தவன் கடைசியாக மீண்டும் எங்களிடமே வந்தான். வந்தவன் என் கையிலிருந்த பாஸ்போர்ட்டை பறித்துப் பார்த்தான் பின்பு, ஹக்கீமின் பாஸ்போர்ட்டையும் பறித்துக்கொண்டு எதுவுமே பேசாமல் வேகமாக நடக்கத் தொடங்கினான்.

**முதீர்**

"முதீர் என்பவர் போலீஸ் அதிகாரி. நஜீப் மற்றும் ஹமீதும் போலீஸ் அதிகாரி முதீரைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே நான் செக்யூரிட்டி கூண்டை நோக்கி திரும்பினேன். அந்த போலீஸ் காரன் எங்களை முதீரின் அறைக்குக் கூட்டிக் கொண்டு போனான். கம்ப்யூட்டரில் ஏதோ செய்து கொண்டிருந்த முதீர் எங்களைப் பார்த்ததும் நிமிர்ந்து உட்கார்ந்தான். முதீர் எங்களிடம் கேட்டது எதுவுமே எனக்கு புரியவில்லை. அதற்கிடையே நான் அவரின் அறைக்குள் என் கண்களை ஒரு முறை ஓடவிட்டேன். சுவற்றில் ஒட்டி இருந்த புகைப்படத்தை காட்டி இவனை தெரியுமா என்று கேட்டார். கோபம் குறையாத முதீர் என் செவியில் மீண்டும் ஓர் அறை அறைந்துவிட்டு நாற்காலியில் போய் உட்கார்ந்தான். மனிதனின் உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் கண்டிப்புடன் நடந்துக்கொள்ளும் போலீஸ் அதிகாரி அவர்."

**இப்ராஹிம் காதரி**

"எதிர்ச்சுவரில் ஒரு போர்டு அதில் ஏராளமான புகைப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. புகைப்படங்களை அப்படியே பார்த்துக்கொண்டு வரும் போது, நான்காவது வரிசையில் மூன்றாவதாக இருந்த நபரைப் பார்த்ததும் நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். பிரதேச பனிப்பாற போல கண்களைக் கசக்கிக்கொண்டு மீண்டும் ஒரு முறை அந்த படத்தையே உற்றுப்பார்த்தேன் அது அந்த புகைப்படத்தில் உள்ள இப்ராஹிம் காதரி புகைப்படம்தான்."

வக்கீல்கள், முத்தவல்லி ஆகியோருடன் முகம் தெரியாத பல்வேறு அரபிகளும் அங்குமிங்குமாக பரபரப்புடன் நடந்து கொண்டிருந்தார்கள்.

**ஜானகியம்மா**

"எங்கள் வீட்டுக்கு மூன்று வீடு தள்ளியிருந்த ஜானகியம்மா மூன்று ஆடுகள் வளர்த்து வந்தாள். பாதையோரங்களிலும், தோட்டத்திலும் அவை இலைகளைக் கடித்துக் கொண்டிருப்பதை நான் போகிறபோக்கில் பார்த்திருக்கிறேன். அவற்றின் குட்டிகள் அங்குமிங்குமாக குதியாட்டம் போட்டுக்கொண்டிருக்கும்."தெரிந்திருந்தால் அப்போதே அவற்றிடம் எப்படி பால் கறப்பது என்று படித்திருக்கலாம்.

**சைனு**

"நஜீப் மனைவி சைனு. கர்ப்பிணி அவள் எந்த நிமிடமும் பிரசவிக்கலாம் என்ற நிலையில்தான் ஊரிலிருந்து நான் புறப்பட்டு வந்தேன்."

**நபீல்**

"என் மகனுக்காக நான் பாதுகாத்து வைத்திருந்த பெயர் நபீல். நபீல் என் மகன். நீபில் நீ எனக்கு அல்லாஹ் தந்த ஒப்பற்ற பரிசு."

**கசாப்பு ராவுத்தர்**

பெயரைப்போலவே எங்கள் ஊரில் ஒரு பிரபலமான ரவுடி இருந்தான். அவன் பெயர் கசாப்பு ராவுத்தர். ஒரு நாள் என்னுடைய வாப்பா ஒரு மரப் பாலத்தின் வழியாக வாய்க்காலை கடந்து கொண்டிருந்தார். ஏகதேசம் பாலத்தின் பாதி தூரம் வந்தபோது தான் பார்த்தார். எதிர்முனையில் அவன் வந்து கொண்டிருக்கிறான். அதுவோ ஒற்றைத்தடி பாலம். சிரமத்துடன் ஒருவர் மட்டுமே நடந்து போக முடியும்.

"கசாப்பு ராவுத்தரோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் பாலத்தில் நெஞ்சை நிமிர்த்தியபடி வந்து கொண்டிருக்கிறான். பக்கத்தில் வந்ததும் அப்பாவை திரும்பிப்போகும்படி சொன்னான்."

வாப்பாவோ முடியாது என்று தலையாட்டினார். ராவுத்தர் ஒன்றிரண்டு தடவை சொல்லிப் பார்த்தான். வாப்பா கேட்கவில்லை. மூன்றாவது முறை ராவுத்தர் பேசவில்லை. வேகமாக வந்து தலையால் வாப்பாவின் நெஞ்சில் ஓங்கி ஓர் இடி, பன்னிரெண்டடி ஆழமுள்ள வாய்க்காலின் ஒரு ஓரத்தில் கிடந்த கருங்கல்லில் கை இடிக்க நிலைகுலைந்து விழுந்தார் வாப்பா. அதைப்போல

ஒரு தடவை என் நெஞ்சில் முட்டி என் கையை ஒடித்த பொலி ஆட்டைப் பற்றி சொல்லிருயிருக்கிறேன் அல்லவா? அவனுக்கு நான் வைத்த பெயர் கசாப்பு ராவுத்தர். கசாப்பு ராவுத்தர் அன்று வாப்பாவை முட்டித் தள்ளிய அதே விதத்தில்தான் பொலியோடும் என்னை முட்டித் தள்ளியது.

**ஆடுகளுக்கு பெயர் சூட்டுதல்**

மஸராவுக்குள் என்னால் இனம் காண முடிந்த எல்லா ஆடுகளுக்குமே நான் ஒவ்வொரு பெயர் வைத்திருந்தேன். சும்மா ஒரு சுவாரசியத்துக்காக, தேவைப்பட்டால் திட்டித் தீர்ப்பதற்காக, கொஞ்சுவதற்காக.

கசாப்பு ராவுத்தர், மேரி மைமுனா, இண்டிப்போக்கர், நண்டு ராகவன், பருப்பு விஜயன், சக்கி, அம்மிணி, கௌஸ் ரௌஃபக், நபீல், பிங்கி, அம்மு, ரஸியா, தாஹிரா என்ற கிராமத்துப் பெயர்களுடன் ரஜினிகாந்த, வடிவேல் .... ஏன் அரசியல் தலைவர்கள் வரை என்னுடைய மஸராவில் இருந்தார்கள்.

இவர்கள் எல்லோருமே ஏதாவதொரு விதத்தில் எனக்கு பிடித்தமானவர்கள்.

நீங்கள் ஆடுகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் தெரியும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு மனிதனின் முகச்சாயல் இருப்பதை. ஆடுகளுக்கு, முகச்சாயல் வைத்து மட்டுமே நான் பெயர் கொடுப்பதில்லை. அதன் இயல்பு, நடை, குரல், பார்க்கும் பார்வை போன்றவற்றோடு தொடர்புபடுத்த ஏதோவொரு சம்பவம் என்று, ஆடுகளின் பெயர்க் காரணம் நீண்டு போகும். ஊரில் ஆட்களின் பட்டப்பெயர்களுக்கு காரணமிருப்பதைப் போல்.

ஒரு தடவை என் நெஞ்சில் முட்டி என் கையை ஒடித்த பொலி ஆட்டைப் பற்றி சொல்லியிருக்கிறேன் அல்லவா? அவனுக்கு நான் வைத்த பெயர் கசாப்பு ராவுத்தர். இப்படித்தான் ஆடுகளுக்கு நான் பெயர் சூட்டினேன்.

**மேரி மைமுனா**

"என் காதல் கதையின் முதல் நாயகி. ஐந்தாம் வகுப்பில் தான் என் முதல் காதல் அரும்பியது. என்னுடைய வகுப்பின் மிக அழகான, துடிப்பான, நல்ல சங்கீத ஞானம் உள்ளவள் மேரி."

இந்த காதல் விஷயம் எப்படியோ என் உம்மாவுக்கு தெரிந்துவிட்டது. என்னுடைய வாயைப் பிடுங்கி விஷயத்தை உம்மாவிடம் போட்டுக் கொடுத்த நயவஞ்சகன் என்னுடைய மூத்த அண்ணன் அப்துல்.

**புல்காரி ரமணி**

நான் மஸராவுக்கு போன தினத்தில், முதன்முதலாக பால் கறக்கச் சென்ற ஆட்டுக்குத்தான் பின்பு நான் புல்காரி ரமணி என்று பெயர் வைத்தேன். நான் முதலாக கை வைத்த ஆடு என்பதே அந்த பெயருக்கு காரணம்.

"என்னுடைய மாமா ஒருவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போவார். நான் அவரை போக்கர் மாமா என்று கூப்பிடுவேன்." போக்கர் மாமா என்னையும் கூட்டிக்கொண்டு சற்று தூரத்திலிருக்கும் ஒரு பம்ப் செட்டுக்கு போய், புல் அறுக்க வரும் பெண்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பார். அப்படி வரும் பெண்களில் ஒருத்திதான் ரமணி. எங்களூரின் பெயர் பெற்ற ஒரு தாசிதான் புல்காரி ரமணி.

**அர்பாபுவின் மகள் திருமணம்**

இன்றைக்கு ராத்திரி நம்முடைய மூத்த அர்பாபுவின் மகளுக்குக் கல்யாணம். நாங்களிருவரும் போகிறோம். நீ உறங்காமல் ஆடுகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நரிகள் வரும், பாம்

புகளும் வரலாம். ஏன், சில சமயம் திருடர்கள்கூட வருவார்கள். நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காலையில் நான் திரும்பி வரும்போது உனக்கு குபூஸும், பிரியாணியும், மஜ்பூஸும் கொண்டு வருவேன். நீ எனது நம்பிக்கைக்குரிய வேலைக்காரன். அத்தனை நாள் கடின வேலைக்குக் கிடைத்த பரிசுகளே அர்பாபுவின் அந்த வாக்குகள்! ஆமாம் வெறும் வாக்குகள் மட்டும்தான்.

**குஞ்ஞக்கா**

"பத்தா சந்தையின் அப்படிப்பட்ட ஒரு மலையாளி ஆலமரமான குஞ்ஞக்காவின் ஹோட்டலுக்கு முன்னால்தான் நான் மயங்கி விழுந்திருந்தேன். அல்லாவின் கருணையைத்தான் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அறிமுகமேயில்லாத அந்தச் சந்தையில் ஊரும் திசையும் தெரியாமல் திக்கு முக்காடிக்கொண்டிருந்த நான் எங்காவது ஒரு மூலையில் போய் மயங்கி விழுந்திருக்கலாம்."

அந்த பயங்கர உருவத்துக்குள் கிடந்த என்னை ஒருத்தர்கூட திரும்பிப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால் நான் போகவேண்டியது குஞ்ஞக்காவிடம்தான் என்று செய்தது அல்லா அல்லவா! மயங்கி விழுந்தேன். அவ்வளவுதான். பாக்கியுள்ளதையெல்லாம் அவன்தான் குஞ்ஞக்காவின் இதயத்தில் ஒளித்து வைத்திருந்தானே! எனக்கு வந்த மூன்றாம் நான்தான் எனக்கு நினைவு திரும்பியதாம்.

**சமுதாயச் சிந்தனை**

இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகும். சமுதாயத்தைப் பிரதிபலிக்காத எந்த இலக்கியமும் வெற்றிபெறாது. சமுதாயத்தில் இருந்தே இலக்கியங்கள் தோன்றியுள்ளன. எல்லாக் காலங்களிலும் இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவையாக அமைந்துள்ளது. அவை, சங்ககாலம் தொடங்கி இன்றுவரை  நவீன இலக்கியம் வரை மனிதனின் வாழ்க்கை முறையைப் பாடுகின்றன. மக்கள் பின்பற்றும் பண்பாடு, சடங்கு முறைகள் முதலானவற்றைப் பல நிலைகளில் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவ்வகையில் பென்யாமின் 'ஆடு ஜீவிதம்' என்னும் நாவலில் அமைந்துள்ள சமுதாயப் பார்வைகளையும் பல வகையில் ஆராய்ந்து பதிவு செய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**சமூகம்**

சமூகம் என்பது வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்வுகளைக் குறிப்பதாகும். வாழ்க்கையில் ஏற்படுகின்ற எல்லாவித இன்பத் துன்பங்களையெல்லாம் சமூகம் நிலைநிறுத்துகிறது. சமூகம் மாற்றத்தை முன் வைத்துப் போராட முன்வரும் ஒரு தனிமனிதனுடைய வாழ்க்க நிலையைக் குறிப்பதாகும். சமுதாயம் சமூகத்தின் ஒரு பிரிவாகும். சமூகத்திற்குள் இஃது அடங்கியிருக்கும். ஒரு சிறிய மக்கள் தொகுதியாக இயங்கும். அதாவது சமூகம் அமைந்திருக்கின்ற நிலப்பகுதியில் ஒரு சிறிய இடத்தில் சமுதாயம் அமைந்து இருக்கும். "சமூகம் என்பது தனியாகவும் ஒரு சிலராகவும் இருந்த மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடைய சேர்ந்து முயலுகிற போது அடைவது தான் சமூகம் எனப்படும்" என்று க.ப.அறவாணன் கூறுகிறார்.  "பொதுவான குறிக்கோளை அடைவதற்குக் கூட்டுறவாகச் செயல்படும் பகுத்தறிவுள்ள மக்களின் ஒழுக்க நியதிக்கு உட்பட்ட பிணைப்பைச் சமூகம் என்கிறோம்"

என்று மேலை நாட்டு அறிஞர் கிஸ்பர்ட் கூறுகிறார். "சமூகம் என்பது இயற்கையில் ஒழுங்கின்றித் தோன்றி வளர்ந்த காடன்று வரம்பு கோலியும் வரிசையமையத் திருத்தியும் ஒழுங்கு சமைய உருப்படுத்தியும், காலமுறைப்படி கண்காணித்தும் பேணப்படும் ஒரு நன்னிலமாகும்" என்று கு.வெ.பாலசுப்பிரமணியன் கருதுகிறார். சமுதாயத்தைச் சார்ந்த படைப்பாளி தான் வாழும் இடத்தைச் சுற்றியே தன்னுடைய எண்ணங்களைப் பரவவிட்டுக் கொண்டிருப்பான். இதனால் சமுதாய அவலங்கள் எளிதில் அவனது மனதைக் கல்விக் கொள்கிறான்.  ஒவ்வொரு இலக்கியத்திற்கும் சமுதாயம் அளித்துள்ள மதிப்பு அஃது இன்றளவும் மக்களின் மத்தியில் பேசப்படுவதாகவும் பாராட்டப்படுவதாகவும் உள்ளது.

இலக்கியத்தின் தரத்தையும் தன்மையும் தீர்மானிப்பது அதன் அகக்கூறுகள் என்றால், சமுதாயத்தில் நடைபெறும் அவலங்களையும் கொடுமைகளையும் கூறுவது அதன் புறக்கூறுகளாக அமைகின்றன.

ஒரு படைப்பில் எந்தச் சமுதாயம் காட்டப்பெறுகிறதோ, அந்தச் சமுதாயத்தின் பண்பாடு, பேச்சு, பழக்கவழக்கம், குடும்பம், உறவு முறைகள் போன்ற பல கூறுகள் காட்டப்பட்ட வேண்டும்.

"அனைத்துச் சமூக உறவுகளையும் தன்னகத்தே கொண்டது ஒரு பின்னல் என்றும் கையாளப்படுகிறது. பொதுவாக சமூகம் என்பது சமூக உறவுகளின் தொகுப்பு என்ற பொருளைத் தந்தாலும் நடைமுறையில் சமூகவியல் அறிஞர்கள் இட்டப் பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துவதில்லை. ஒரு நிலப் பகுதியில் கூடி வாழும் பெருந்திரளான மக்கள் என்ற பொருளில் சமூகத்தைக் குறிக்கின்றன. அதாவது தம்மைப் பேணிக்காத்துக் கொள்வதற்கும் அழியாமல் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக்குழு சமூகம் எனப்படும் என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகிறது"

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்ற குறளுக்கு கேற்ப ஒரு வகையில் இலக்கியங்களும் இத்தன்மையை உடையதே. பளிங்கு போல அடுத்ததை முழுமையாகக் காட்டாமல் சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவதே இலக்கியமாகத் திகழ்கிறது.

ஒரு தனிமனிதன் தன்னைச் சுற்றிச் சுழன்று இயங்குகின்ற சமுதாய வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து தன் அனுபவங்களைச்  சேகரிக்கின்றான். சேகரித்த தன்னுடைய அனுபவங்களைத் தன் கற்பனையுடன் கலந்து இலக்கியங்களை உருவாக்குகின்றான்.

சமுதாயம் என்பது தனி மனிதரால் இணைக்கப்பட்ட கூட்டமாகும் என்றும் இங்கு மனிதர் குறிப்பிட்ட உறவாலும் நடத்தை முறையாலும் இணைகின்றனர் என்றும், இக்கூட்டத்தில் சேராதவர்களிடமிருந்து உறவு, நடத்தை ஆகியவற்றால் வேறுபடுகின்றன.

"சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று என்றும், மனித வாழ்வோடு பண்பாடு பிணைந்த நாளே சமுதாயம் உருவான பெருநாள் என்றும் கணவன் மனைவி என்ற பிணைப்பு உண்டான காலந்தான் பண்பட்ட  சமுதாயம் உண்டான காலம் என்று ஒருவாறு கொள்ளலாம் என்றும்; அ.மு. பரமசிவானந்தம் கூறுகிறார்" சமுதாயம் என்பது அரசியல், கலை, பண்பாடு, சமயம், இனம் முதலியவற்றை உள்ளடக்கியது எந்தவொரு படைப்பானாலும் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தைக் காட்டாது செல்லமுடியாது.

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்.

**இலக்கியமும் சமுதாயமும்**

ஒரு சமுதாயத்தின் சிந்தனை வளத்தை நிலையாக்கும் வகையில் சொல் வடிவில் நிழற்படமாக்குவதே இலக்கியமாகிறது.

இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளி சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டு கற்பனையுடன் கலந்தபின் ஒரு கலைபடைப்பாக மாறுகிறது. அதன் பிறகு உணர்ச்சி, யதார்த்த நிலையினையும் கொண்டு வெளிப்படுத்தப்படுகிறது.

மனித வாழ்க்கைப் பயணத்தில் வாழ்வு போராட்டத்தில் ஏற்பட்ட தொல்லைகளையும் துயரங்களையும் மறந்து இளைப்பாற, உழைத்துக் களைத்த உடலும், மனமும் புத்துணர்ச்சி பெற இலக்கியம் நிழலாக நின்று உதவுகிறது.

ஒரு மனிதனின் சக்தியாக இலக்கியம் திகழ்கிறது. தனி மனிதனின் சாதனையாகவும்,  சமுதாயம் இலக்கியத்தின் பின்னணியில்தான் இருக்கிறது. இலக்கியம் மட்டுமன்று சமுதாயத்தால் தான் மனிதனே உருவாக்கப்படுகிறான்.

"இலக்கியம் ஒரு பண்பாட்டின் பிரிக்கமுடியாத உறுப்பு. பண்பாடு என்ற உறுப்பில் இருக்கிற துணை உறுப்புகளோடு வலுவாக பொரு ந்தி இயங்குகின்ற பிரிக்க வியலா உறுப்பே இலக்கியம். இலக்கியம் இல்லாத பண்பாடு கண் இல்லாத மனிதனைப் போல் ஆகும். இலக் கியம் பண்பாட்டை உருவாக்கவும், உருக்குலைக்கவும் செய்யக்கூடி யது. சமுதாய வளர்ச்சி தான் இலக்கியத்தின் போக்கை நிர்ணயிக்கி ன்றது" என்று க.ப.அறவாணன் கூறுகிறார்.

"இலக்கியம் என்ற சமூக சக்தியை அன்றைய சமுதாயத்தின் வேறு பல சாதிகளும் தாக்கி நிர்ணயம் செய்தன. இலக்கியம் மனித உறவு களை உணர்வுபூர்வமாக தொட்டு அறிவுப் பூர்வமாக விளக்கி ஆக்க ப்பூர்வமாக செயல்படவைக்கிற காரணத்தால் சமூக மாற்றத்திற்கா ன கருவியாகவும் இலக்கியம் திகழ்கிறது"
என்று க.ப.அறவாணன் குறிப்பிடுகின்றார்.

"இலக்கியம் பெரிதா? சமுதாயம் பெரிதா? என்றால் சமுதாயம் தான் பெரிது சமுதாயத்தை விளக்க வந்ததும், விளங்க வைப்பதும் இலக்கியம் ஆகும். நீர் இல்லாமல் மீன் வாழமுடியாது. ஆனால் மீன் இல்லாமல் நீர் இருக்க முடியும். சமுதாயத்திற்கும், இலக்கியத் திற்கும் உள்ளத் தொடர்பை இந்த உவமையின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்" என்று க.ப.அறவாணன் கூறுகிறார்.

"ஒரு படைப்பாளர் வாழும் மண்ணில் இருந்து உருவாகிறது. மண் ணில் வாழும் மக்களைக் கொண்டு உருவாகிறது. மண்ணும் மக்க ளும் சேர்ந்து சமுதாயம் என்ற வேரை மண்ணை உதறிவிட்டு ஒரு படைப்பிலக்கியம் விண்வெளியில் தவிர்க்கவும் முடியாது தழைக்க வும் முடியாது"

இப்படி அறிஞர்கள் பலர் சமூகத்திற்கும், இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

**படைப்பும் பார்வையும்**
பென்யாமின் 'ஆடு ஜீவிதம்'
என்ற சிறுகதையில் பல்வேறு வகையான சமுதாயப் பார்வைகள் காணப்படுகின்றன. சமுதாயச் சிக்கல், குடும்பச் சிக்கல், வறுமை, அடிமைத்தனம், மண்ணும் மனித மனமும் போன்ற சமுதாயச் சிந்த னையைப் பல்வேறு கதை மாந்தர்கள் மூலம் வெளிப்படுவனவாய் ஆசிரியர் கூறுகிறார்.

**ஆய்வறிஞர்களின் பார்வையில் சமுதாயம்**
சமுதாயம் பற்றி ஆய்வாளர்கள் பலர் கருத்து விளக்கங்களைத் தெரிவித்துள்ளார். படிக்க மரபு செயலாற்றும் முறை அதிகார வலிமை ம ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றில் ஓர் அமைப்பில் முறையாகவும் பல குழுமங்கள் பிரிவுகள் ஆகியவற்றுடன் நெறிபடு த்தும் ஒழுங்கு முறையாகவும் இருப்பது எதுவோ அதுவே சமுதாயம் என்று மெக்லியர் மற்றும் பேஜ் என்பவர்கள் கூறுகின்றனர். இவ்விளக்கத்தின் மூலம் சமுதாயம் என்பது செயலாற்றும் கூட்டுத் தொகுதி முறையாகும் என்பதை தீர்வாகவும் உணர்த்துக்கின்றனர். கிட்ரங்ஸ் என்பவர் சமுதாயம் என்பது தன்னுள்ளே ஒரு பேரவை போன்ற முறையான உறவுகளைக் கொண்ட அமைப்பு ஆகும் என்று ம் அவ்வுறவால் மனிதன் ஒவ்வொருவரும் இணைந்து வாழ முடியு ம் என்று கூறுகிறார். சமுதாயம் என்பதற்கு சிறந்த விளக்கமாக கருதலாம். மனிதன் தமக்கு அருகில் வாழ்பவர்களுடன் மட்டுமே உறவு வைத்துக்கொள்கிறான். இதனால் சமூக கருத்துகள் பரம்பரை பழக்கங்கள் ஒருவரோடு ஒருவர் நட்புடன் பழகுதல் போன்ற பல சமூகப் பண்புகளை வளர்த்துக்கொள்ளுதல் தவிர்க்க இயலாதவை யாகும்.
சமுதாயம் என்பது திட்டமான அமைத்துப் பெற்ற வாழ்க்கை முறையி ன் ஒரு சோதனை என்று நா. நளினி தேவி வரையறை செய்கிறார்.

**சமுதாய ஆய்வு**
மக்களின் உறவு நடத்தை ஆகியவற்றில் சமுதாயம் வேறுபடுகின்ற து. இதனைக் க. பாஸ்கர் தன் ஆய்வில் சமுதாயம் ஒரு அருவமான பண்பிலான பிரிவாக உள்ளது என்று இது சமூக உறவு மரபு சட்டம் முதலிய மூன்றும் அடிப்படை கூறுகளால் அமைக்கபட்டதாகும் என் று கருத்துரைக்கின்றனர் என்று விளக்கம் வழி சமுதாயம் என்பது என்னவென்று புலப்படுகின்றது.

**சமூக உறவுகள்**
இன்று சமுதாயத்தில் பார்க்கின்ற சமூக உறவுகள் பலவகை பட்டவையாக அமைந்திருக்கின்றன. ஏனெனில் மனிதர்களும் அவர்களி ன் மன நிலைகளும் பலவிதம் அவர்கள் தங்கள் மேல் கொண்டிருக் கும் உறவுகளும் பல வகையாகும். ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரு சமுதாயத்தின் சமூக உறவுகொண்டு ஒன்றாக வாழ்ந்து வருகின் றனர். சமூக உறவுதான் சமுதாயத்தின் அடிப்படையாக உள்ளது. இதனுள் விளக்கும் போது அது மனித உறவுகளின் கூட்டுத்ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரு சமுதாயத்தின் சமூக உறவுக்கொண்டு நன்றாக வாழ்ந்து வருகின்றனர். சமூக உறவுதான் சமுதாயத்தின் அடிப்படையாக உள்ளது. இதனை விளக்கும் போது அது மனித உறவுகளின் கூட்டுத்தொகுதி என்பர் அவ்வுறவின் உள்ளார்த்தமாக வும் குறியிடுகளாகவும் இருக்கும் ஹார்சன்ஸ் கருத்து தெரிவிக்கிறா ர்.
மேலும் சமுதாயம் என்பது சமூக உறவு நிலைகளின் வரை என்று குறிப்பிடுவது இங்கு எண்ணதக்கது என்று தெளிவுப்படுத்தலாம்.

**சமூக அமைப்புகள்**
சமுதாயத்தில் ஒரு இன்றியமையாத அங்கமாக இருப்பது அமைப்பு கள் என்று
1. குடும்பம்
2. திருமணம்
3.கல்வி நிலை
4. அரசியல்
5. பொருளுதார அமைப்பான தொழில் நிறுவனம்
6. சமயம்
ஆகியன சமுதாயத்தின் அடிப்படைகளாகும் என்று ஆய்வாளர் கருதுவார். சமுதாயத்தின் இயக்கத்திற்கு இவை மிகவும் இன்றிய மைதாகக் கருதப்படுகின்றன.

**சமுதாய ஒழுங்கும் கட்டுப்பாடும்**
சமூகத்தை அழியாமல் நிலை நிறுத்திக்கொண்டதற்கும் இணைத்து க் கொள்ளவும் உதவும் மானுட குழு சமுதாயமாகும் என்றும் குறிப்பி டுவர் சமுதாய ஒழுங்கை நிலை நாட்டச் சமுதாய கட்டுபாடு தனி மனி தனின் நடவடிக்கைகளும் சமுதாயாதால் கட்டுப்படுத்தப்படுகின்றன. சமூகமயமாதவில் பிறப்பு முதல் இறப்பு வரை சமுதாய உறுப்பினர் சமூக ஒழுங்கினங்களுக்கு கட்டாயப் பெறுகின்றனர்.

**சமுதாயமும் இலக்கியமும்**
இலக்கியம் பெரிதா சமுதாயம் பெரிதா என்றால் சமுதாயம் தான் பெரிது சமுதாயத்தை விளக்க வந்ததும், விளக்கி வைப்பதும் இலக் கியம் ஆகும். நீரில்லாமல் மீன் வாழ முடியாது. ஆனால் மீன் இல்ல ாமல் நீர் இருக்க முடியும் சமுதயாத்திற்கும் , இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பை இந்த உவமையின் அளவிவேயே விளங்கிக் கொள்ள முடியும் என்று குறிப்பிடும் க.ப. அறவாணன்.
ஒரு படைப்பு படைப்பாளன் வாழும் மண்ணில் உதறிவிட்டு ஒரு படை ப்பிலக்கியம் விண்வெளியில் தவிர்க்கவும் முடியாது என்று கருத்து ரைக்கின்றனர். மேற்கண்ட விளக்கங்கள் வழி இலக்கியங்கள்

சமுதாயத்தினின்றும் உருவானது என்றும் இரண்டிலும் தனித்தனி யாக பிரிக்க முடியாது என்று அறியலாம்.

**சமுதாயத்தின் கூறுகள்**

1. மனித உறவுகளின் கூட்டு
2. மறைமுகமாக அல்லது வெளிப்புற அடையாளங்களில் வெளிப்படும் செயலில நிகழும் உறவுகளின் கூட்டு
3. குறிக்கோள் உறவின் மறைமுகமாவோ வெளி அடையாளங்களிலோ காணப்படும்.

அங்க உறவுகளின் கூட்டு என்று சமுதாயத்தை அடையாளப்படுத்துகிறார். டால்பர்ட் டார்சன் என்ற அறிஞர் இடம் சமுதாய உணர்வு ஆகிய இரண்டையும் சமுதாயத்தின் அடிப்படைக்கூறுகளாக குறிப்பிடுவார். சமுதாய சிந்தனையாளரான மெர் ஈவர் விளக்கம் தருகிறார்.

மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதிலேயே அது சமுதாயம் என்று பெயர் பெருகிறது. அவர்களின் தேவை அதற்குள்ளேயே நிறைவேற்றப்பட்டு விடுகிறது. இதனை இடம் என்று கூறலாம். இவற்றின் வழி சமுதாயப் பிரிவுகளையும் கூறுகளையும் அறிந்து கொள்ளலாம்.

**எதிர்பார்ப்பும் ஏக்கமும்**

எவ்வளவி காலந்தான் இப்படியே தண்ணீருக்குள் முங்கி எழுந்து கொண்டிருப்பது. ஒரு தடவை வெளியே போனால் தான் என்ன? ரொம்ப நாள் ஒண்ணும் இருக்க வேண்டாம். அந்த அளவுக்கு பேராசையும் இல்லை. சில்லறைக் கடன்கள் சிலதை அடைக்கனும். வீட்டில் மேலும் ஒரு அறை கட்டணும்.

எல்லா மலையாளிகளுக்கும் சாதாரணமாக வரும் ஆசைதான் அது. மட்டுமல்ல ஆற்றில் மணல் எடுப்பதற்கு பல கெடுபிடிகள் வரப்போவதாக ஒரு பேச்சும் இருக்கிறது. ஆற்று மணலும் இல்லாமல் போனால் பின் வேறெந்த வேலைக்குப் போகமுடியும்..? பட்டினி கிடக்க முடியுமா? முன்பாக இருந்தால் பட்டினி கிடந்திருக்கலாம். அப்படி பட்டினியும் கிடந்திருக்கிறோம்.

இப்போதோ உம்மாவின் நச்சரிப்பு தாங்காமல் ஒரு கல்யாணமும் கட்டியாச்சு. அவளுக்கு இப்போ நாலு மாசம். செலவுகள் மணல் குவியல் போல் குவிந்து வருகிறது. மட்டுமல்ல இப்போது சில நாள்களாக காய்ச்சலும் இருமலும் வேறு விட்டு, விட்டு வந்து கொண்டிருக்கிறது. தினமும் தண்ணீருக்குள் ஊறிக்கிடப்பதால் இருக்கும். இப்படியே போனால் நிமோனியாவில் தான் கொண்டு போய்விடும். அதற்காக தண்ணீருக்குள் கால் நனைக்காமல் இருக்க முடியுமா? இது இறைவன் கொண்டு வந்த வாய்ப்புதான். அதை விட்டுவிடக்கூடாது. ‘யாராவது இருந்தா சொல்லு, இது என் மச்சான் வழியாக வந்திருக்கு மச்சான் லீவில வந்திருக்கான். இப்போ பைசா கொடுத்துவிட்டா, ரெண்டு மாசத்துல விசா அனுப்பி வைப்பான்.’

கருவாற்றா நண்பன் இப்படிச் சொன்னபோது, ஸைனுவின் நச்சரிப்பு தாங்காமல் கொஞ்ச நாள்களுக்கு முன்னால் எடுத்து வைத்திருந்த பாஸ்போர்ட் என் கண்ணில் நிழலாடியது. ‘ஒரு ஆள் இருக்கான். வேற யாருக்கும் கொடுத்தடாதுடாண்டாம்.’

நான் அப்போதைக்கு சொல்லி வைத்தேன். அப்படீன்னா நீ நாளைக்கு வீட்டுப் பக்கம் வா. நாம ரெண்டு பேரும் போய் மச்சானப் பார்ப்போம், பாக்கி காரியங்களை நீங்களே பேசிக்கோங்க.

நண்பன் போனபிறகு மனத்துக்குள் கில்லியாட்டம் என்ன செய்வது ? இது வேணுமா... வேண்டாமா?

ரொம்ப நேரமாக மனத்துக்குள் ஊறப்போட்டு ஆலோசித்தும் கரைகாண முடியாமர் தவித்தபோதுதான், கடைசியில் வேறு வழியெதுவும் தெரியாமல் ஸைனுவிடம் நான் மெதுவாக விஷயத்தைச் சொன்னேன்.

அதைக்கேட்டதும் எல்லாப் பெண்களையும் போல் அவளுக்கு சந்தோஷத்தில் மிதந்தாள்.

‘மச்சான், இது படச்சோன் கொண்டு வந்த சந்தர்ப்பமாக்கும் விட்டுடாதீங்க. இத்தனை நாளா நான் எங்க அண்ணன்மார்களிடம் சொல்லிக்கிட்டே இருந்தேனே. ஒண்ணும் நடக்கலயே.’

ஸைனுவின் இரண்டு சகோதரர்களும் ரொம்ப நாள்களாக கல்ஃபில் இருக்கிறார்கள்.

ஆனா ஸைனு, ரொம்ப பைசா கொடுக்கேண்டி வருமே. நம்ம கையில சல்லிக் காசுகூட இல்லயே. நான் புலம்பினேன்.

‘மனசிருந்தா எல்லாந் தானே வரும், மச்சான். இங்க எல்லாரும் கையில பைசா வச்சுகிட்டா புறப்படுறாங்க. நீங்க தைரியமா போயி அந்த கருவாற்றாக்காரனப் பாருங்க..’

ஸைனு எப்போதுமே அப்படித்தான். அவளிடமிருந்து நிராசை பூண்ட ஒரு வார்த்தைகூட வெளியே வராது. இல்லாமையிலும் எல்லாம் இருக்கிறது என்று காட்டுவதில் திறமைசாலி.

பெண்களாக இருந்தால் இப்படித்தான் இருக்கனும் என்று மனத்துக்குள் ரகசியமாக நான் பலமுறை பெருமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்குள் கல்யாணம் முடிந்து கொஞ்ச காலம்தான் ஆகியிருக்கிறது. ஆனாலும் அதற்குள் பலதடவை இப்படி பெருமைப்படும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருக்கிறது.

அடுத்த நாளே நண்பனையும் கூட்டிக்கொண்டு அந்த மச்சானைப் போய் பார்த்தேன். முப்பதினாயிரம் ரூபாய் கேட்டான். அதில் இருபது, மச்சான் இரண்டு வாரம் கழிந்து கல்ஃபுக்கு திரும்பிப்போவதற்கு முன்னால் கொடுக்க வேண்டும்.

அரபியிடம் கொடுத்தால்தான் விசா சரியாகும். பாக்கியுள்ள பத்து, விமான டிக்கெட்டுக்கும் வேறு செலவுகளுக்குமாக, விசா கிடைத்தபின் பம்பாயில் ஏஜென்டிடம் கொடுத்தால் போதும். அப்போது அவசரத்தில் நான் சரியென்று தலையாட்டி வைத்தேன். அதன்பின் மச்சான் போவதற்கு முந்திய நாள் ராத்திரி எப்படியோ போய் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தோம். பிறகு மீதித்தொகை ஒரிஜினல் விசாவை பார்த்த பிறகு தான் ஏஜென்டிடம் பணத்தைக் கொடுத்தோம். பம்பாய் மலையாளிகளுக்கு மட்டுமேயான விசால மனது.

**வறுமை**

“கல்ஃப் தெருக்களில் என் முதல் பயணம் ஒரு திறந்த டிக்கிக்குள் ஆகிப்போனதே என்னும் வருத்தம் ஒருபுறமிருந்தாலும் ஒரு விதத்தில் அது எனக்கு சந்தோஷத்தையே தந்தது எனலாம். அந்த டிக்கிப் பயணம் எத்தனை மணி நேரமாக நீண்டிருந்ததென்று என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை. சற்று நேரத்தில் நகரத்தின் பிரகாசம் மெதுவாக குறையத் தொடங்கியது. நாங்கள் நகரத்தை விட்டு வெளியேறிக்கொண்டிக்கிறோம் என்பதை சொல்லாமல் சொல்லின. ”

விமானத்தில் வைத்து எப்போதோ குடித்த ஒரு குவளைத் தண்ணீர் தான் இதுவரையிலான அன்றைய எனது ஆகாரம் ஏதாவது சாப்பிட்டு விட்டு போ என்று சசி எவ்வளவோ வற்புறுத்தியபோதிலும் அன்றைய காலைநேர பயணப் பரபரப்பில் எனக்கு சாப்பிடவே தோன்றவில்லை.

**பசியும் விரக்தியும்**

விமானத்தில் பலவகையான உணவுகள் வந்து கொண்டிருந்த போதும், அவற்றை எப்படிச் சாப்பிடுவது எனத் தெரியாததால் ஒரு கப் தண்ணீர் மட்டும் குடித்து நான் பசியை அடக்கிக் கொண்டேன். பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ஒரு தடவை ஆற்றில் முங்கி வெளியே வந்தால் ஏற்படுமே அது போன்றதொரு அகோப்பசி.

“விமான நிலைத்தில் வைத்து நான் பசியைப் பற்றி பேசிக்கொண்டிருந்த போது பசியால் நான் இப்போதே செத்துப்போய்விடுவேன் என்று புலம்பிக் கொண்டிருந்தான் ஹக்கீம். ஐயா அர்பாபு கொஞ்சம் வண்டியை நிறுத்தி எங்களுக்கு சாப்பிட ஏதாவது வாங்கித் தாருங்களேன். குடிக்க ஒருவாய்த் தண்ணீராவது தாருங்கள் என்று உரக்க சத்தமிடத் தோன்றியது. ஆனால் சத்தம் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டது.”

மனம் முழுக்க பயம். நான் அப்படி கேட்பது அர்பாபுவுக்கு பிடிக்காமல் போய்விட்டால் என்ன செய்து? மட்டுமல்ல அங்கே அந்த கனத்த இருட்டைத் தவிர வேறெதுவும் இருப்பதற்கான அறிகுறிகளே இல்லை.

வண்டி மண்பாதைக்குள் சஞ்சரிக்கத் தொடங்கி ஒரு மணி நேரத்தி ற்கும் மேலாகியிருக்க வேண்டும். வண்டியின் குலுக்கலில் எனக்கு முதுகு வலிக்கத் தொடங்கியது. மூச்சு விடவே சிரமப்படும் அளவுக்கு ஒரே தூசிப்படலம் கடவுளே என்ன பயணம் இது? என்னையு மறிய ாமல் நான் புலம்பினேன்.
அந்தக் கணம் முதல் இனம்புரியாத ஏதோவொரு பீதி, ஒரு குளவிை யப் போல் என்னைச் சுற்றி வட்டமடிக்கத் தொடங்கியது காரணமில் லாத ஏதோவொரு சந்தேகம் என் மனத்தைப் பிடித்து உலுக்கியது. நான் ஆசைப்பட்டிருந்த, நான் கனவு கண்டிருந்த கல்ஃப் அல்ல இது என்றொரு நினைப்பு அடிமனத்தை அரிக்கத் தொடங்கியது. என்னுடைய அர்பாவுவின் வண்டியில்தானே நான் போய்க் கொண் டிருக்கிறேன். அவருடைய கையில் என்னுடைய வாழ்க்கை பாதுகா ப்பாகவே இருக்கிறது. பின் ஏன் நான் அனாவசியமாக நேரத்தை நினைத்து கவலைப்படவேண்டும். இருண்ட அந்த ஆகாயத்தையே வெறுமையுடன் பார்த்துக்கொண்டு எத்தனை நேரமாக நான் அப்படி யே கிடந்தேன் என்று தெரியவில்லை. வண்டியின் இரைச்சலும் குலுக்கலும் எனக்குத் தாலாட்டாயின். இவ்வாறு பசியும் பயத்துடன் என் பயணம் தொடர்ந்து.

**அயல்நாடு பயணம்**

அயல் நாட்டு பயணத்தின் போது நாங்கள அனுபவித்த துன்பங்கள், அரபி ஆத்திரத்தின் முதல் சுவடு. வேறு சிலரோ இடுப்பில் கட்டியிருக் கும் பெல்ட்டை அவிழ்த்து கோபம் தீரும் வரை வாங்கு வாங்கு என் று வாங்கி விடுவார்கள். எதுவும் செய்ய முடியாத போது, பரிதாப ஜீவன்கள் எந்த அளவுக்கு மனமொடிந்து போவார்கள் என்பதை நான் புரிந்து கொண்ட நேரம் இது.
"அடிமையைத் தேடிவரும் அரபியிடம் எந்தவிதமான கருணையை யும் எதிர்பார்க்க முடியாது. இவன் என்னுடைய பணத்தைத் திருடிவி ட்டு ஓடிப்போனவன். எனது மகளை பலாத்காரம் செய்ய முயன்றவ ன், என்னைக் கொலை எசய்ய முயற்சித்தவன்.... என்று மனத்தில் தோன்றிய ஏதோவொரு காரணத்தை சொல்லி அவனை தரதரவெ ன்று இழுத்துச் செல்வான் அரபி. அப்போது பலி பீடத்திற்கு இழுத்து ச்செல்லப்படும் ஆட்டைப் போல் அவனது முகம் அச்சத்தால் விறைத் தப் போயிருக்கும்.அவனது கதறல் ஜெயில் சுவர்களையும் தாண்டி அலையடிக்கும். நான் நிரபராதி என்று அவன் வாய்விட்டு புலம்பின ாலும் அதை கவனிக்க அங்கு யார் இருக்கிறார்கள் அரபி தனது நீதியை தனது விருப்பம் போல் செயல்படுத்துவான்."
ஓர் அன்னிய நாட்டு ஜெயிலில் நாங்கள் எந்த அளவுக்கு சுதந்திரத் தை அனுபவித்தோமோ, அதைவிடவும் அதிகமான சுதந்திரத்தை தன் சொந்த நாட்டு ஜெயிலில் ஓர் அரபி அனுபவிக்கிறான் என்ற அளவில் நீங்கள் இதை புரிந்து கொண்டால் போதும்.
சில அரபிகள் அவனை நாடு கடத்துமாறு கேட்கலாம். அப்படி நடந்த ால் அவன் பிழைத்தான். இந்த துயரத்தையும் தாண்டிவர அந்த துர் பாக்கியசாலிக்கு வலிமையைக் கொடு என்று அல்லாஹுவை பிரார் த்திப்பதைத் தவிர என்னால் வேறு என்ன செய்ய முடியும். அதன்பி ன் ஜெயில் ஒருவித அமைதி நிலவும். எங்களுடன் ஒரே பிளாக்கில் கை கோர்த்து பேசித் திரிந்த, சொந்த ஊரைப் பற்றி கனவுகள் கண் டு, விளையாடிச் சிரித்து, ஒன்றாகக் கூடியிருந்து, சாப்பாட்டை பகிர்ந் து கொண்ட ஒருவனின் பிரிவுத்துயரத்தால் மனம் கனத்துப் போகும் . வேதனை நிரம்பிய அந்த அவஸ்தையிலிருந்து மெதுவாக விடுபட் டு வரும்போது, மீண்டும் வந்துவிடும் அடுத்தவாரம்.
எங்களுடைய அரபியின் சாயலில் எவராவது தென்பட்டுவிட்டால் போது வயிற்றுக்குள்ளிருந்து ஒரு தீப்பந்து உருண்டு வந்து நெஞ்சை ப் பொசுக்கும். அவன் எங்களுக்கு அறிமுகமில்லாதவன் என்று தெரிந்த பின்னால்தான் அந்த எரிச்சல் தணியும்.
இவ்வாறு முதல் சில வாரங்கள் முடிந்தபோது என்னுடைய பதட்டம் மெதுவாகத் தணியத் தொடங்கியது. அதற்குக் காரணம் பீதியுடன் போராடிப் போராடி முடிவில் அது மரத்து போனதாக இருக்கலாம். அன்று வழக்கம்போல் எங்கள் எல்லோரையும் வரிசையாக அணி வகுத்து நிற்கச் செய்வார்கள். எம்பஸி ஊழியர்கள் வரிசைக்கு முன்னால் வந்து எக்ஸிட் பாஸ் தயாரானவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாக வாசிப்பார்கள். அவ்வாறு எத்தனையோ கால வேதனைகளிலிருந்து விடுதலை அளிக்கும் இறுதி அழைப்பு அது.

**உறவும் பிரிவும்**

"என்ன ஆனது அவனுக்கு நான் அவன் முகத்தையே உற்றுப் பார்த் தேன்.
அதில் ஈயாடவில்லை."
சற்றைக்கெல்லாம் நஜீபே என்னும் தீனமான அழைப்பு அவனிடமி ருந்து வெளிப்பட்டது. அந்தக்குரலில் கலந்திருந்த உணர்வுகள் எவையென்று என்னால் இனம் காணமுடியவில்லை. துயரம், பீதீ, வேதனை, கண்ணீர், நடுக்கம் என்று பல்வேறு உணர்வுகளின் கலவையாக இருந்தது அது.
ஒரே சொல்லில், ஒரே அழைப்பில் இத்தனை விதமான உணர்வுகை ளக் கலந்து வெளிப்படுத்த முடியும் என்பதை அப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன். இவ்வுலகில் எந்தவொரு கலைஞனாலுமே வெளிப்படுத்த முடியாத, வாழ்க்கையைப் பற்றிய அப்பட்டமான உண ர்ச்சிக் குவியல். ஹமீது என்னிடம் எதையுமே சொல்லவேண்டிய அவசியம் வரவில்லை.
அவனுடைய கண்கள் நிலைகுத்தியிருந்த திசையை நோக்கி நான் திரும்பினேன். எனக்கு என் சொந்த நாட்டுக்குப் போகனும். என்னா ல் இங்க இருக்க முடியல நான் போகட்டுமா ஐயா என்ன விட்டுடுங்க அழுகையும் அரற்றலுமாக வெளிவந்தது ஹமீதின் குரல்.
இப்படி பாதிவழியிலேயே முடிந்து போகும் வாழ்க்கைகள் தான் எத்த னை தமது சுய வாழ்க்கையை எவரோடும் பகிர்ந்து கொள்ள முடியா மல் தமக்குள்ளேயே முடங்கிப்போகும் பரிதாப ஜீவன்கள் அவை.
இல்லையில்லை நான் உனது முடிவை விமர்சிக்க முயலவில்லை. உனது பேரருளை இன்னமும் உறுதியாக நம்புகிறேன். நீ அவனுக்க ா வித்த துயரங்களின் நாள்கள் முடிவடைய இன்னமும் சில காலம் இருக்கிறது என்பதை மட்டும் நீ அவனுக்க புரிய வைத்து விடு அதுபோதும்.
அப்படிப்பட்ட மோசமானதொரு சூழ்நிலையில் சின்னஞ்சிறு சுகமாவ து தட்டுப்படாதா என்று என் புத்தியை என்ன சொல்வது.
என்னதான் களைப்பாக இருந்தாலும் சரியான படுக்கை இல்லா விட்டால் என்னால் உறங்கவே முடியாது. நான் எதையோ ஆலோசி த்த படியே படுக்கையில் கிடந்தேன்.
சொல்லப்போனால் அப்போது ஊரிடிலிருக்கும் உம்மாவோ, என் ஸைனுவோ. பிறக்கப்போகும் என்மகனோ, மகளோ தான்என் சிந்தனையில் வியாபித்திருக்க வேண்டும். ஏமாற்றங்களும், துயரங் களும் அணை உடைந்து பாய்ந்திருக்க வேண்டும். எனது வாழ்க்ை கயும் காலைச் சுற்றிய தலைவிதியும் என் நெஞ்சைத் தீயாய் சுட்டெரித்திருக்க வேண்டும்.

**உழைப்பு**

எவ்வளவு வேகமாக செய்தாலும் வேலைகளொன்றும் தீர்ந்து பாடி ல்லை. தினமும் காலையில் ஆடுகளுடன் வெளியே கூட்டிக்கொண் டு போக தாமதமானதற்காக என்னை வசைபாடினான்.
"என்னால் இவ்வளவு தான் செய்ய முடியும் என்று நான் ஒரு போடு போட்டேன். ஆனால் அர்பாபு அதற்கு தன் பெல்ட்டால் எனக்கு பதில் சொன்னான். நான் அழுதுகொண்டே பாக்கி கிடந்த வேலைகளைப் பார்க்க தொடங்கினேன். இந்த களேபரங்களுக்கிடையில் காலைச் சாப்பாடு மறந்தே போய்விட்டது."
இரண்டு மஸரா ஆடுகளைத்தான் வெளியே கொண்டுபோய் வந்திரு ப்பேன். அப்போது அர்பாபு என்னை கூப்பிடும் சத்தம் கேட்டது.
நன்கு வளர்ந்த ஆடுகளை சந்தைக்கு கொண்டு போவதற்காக வண்டி வந்திருக்கிறது. நல்ல முதிர்ந்த ஆடுகளைாகத் தேடிப் பிடித்து வண்டிக்குள் ஏற்ற வேண்டும். வண்டி கொண்டு வந்திருப்பதோ என்னுடைய பெரிய அர்பாவு கூடமாட உதவிக்கு வேறு யாருமே இல்லை. நான் ஆட்டுக்கொட்டகைக்குள் நுழைந்தேன். இரண்டு

அர்பாவுக்களும் வெளியே நின்றபடியே ஒரு ஆட்டை கைகாட்டி ஆதி என்று சொல்வார்கள்.
நான் அதைப் பிடிக்க ஓடுவேன். தண்ணீரில் நழுவும் விலாங்கு மீன் போல அது என் கைக்கு அகப்படாமல் குதித்து தப்பியோடும். நானும் விடாமல் எப்படியோ அதைத் துரத்ததிப் பிடித்து அதை வண்டிக்கு இழுத்துக்கொண்டு போவேன்.
அதற்காக எவ்வளவு சக்தியும், நேரமும் வீணடித்தேன் என்று எனக்கே தெரியாது. ஆனால் ஈவிரக்கமில்லாத அர்பாபுக்களோ என்னை மீண்டும் மீண்டும் மஸராவுக்கு விரட்டிக்கொண்டிருந்தார்கள்.
நான் எடக்கு மடக்காக எதையாவது செய்துவிட்டு, கடைசியில் அர்பாபு உத்தேசித்த கறுப்பு ஆட்டைப் பிடித்துக்கொடுப்பேன். இப்படியாக இருபதுக்கும் அதிகமான ஆடுகளைப் பிடித்து கொடுத்து என் நாடி நரம்புகளெல்லாம் சல்லடையாக நொறுங்கிப் போய் விட்டது.
நான் எனக்குள்ளேயே யார் யாரையோ சபித்தேன். எனக்கு கிடைத்த பரிசு முதுகொடியும் வேலை ஒரு போதுமே மறக்கமுடியாத பெல்ட்டடி மதியம் வரையில் முழுப்பட்டினி.

**தண்ணீர் பஞ்சம்**

"நான் பக்கெட்டில் கொஞ்சம் தண்ணீர் பிடித்துக்கொண்டு வைக்கோல் போர் பக்கமாக நகர்ந்தேன். என் பிட்டத்தில் ஒரு துளி தண்ணீர் விழுவதற்கு முன்பாகவே என்னுடைய பின்புறத்தில் சுளீரென்று ஒரு சாட்டையடி. எதிர்பாராத அந்த அடியில் ஒரு நிமிடம் விதிர் விதிர்த்துப் போனேன். "
என்னுடைய கையிலிருந்து பக்கெட்டை முரட்டுத்தனமாக பறித்த அர்பாபு கோபத்துடன் கூச்சலிட்டான். அதன்பின் பெல்ட்டால் என்னை விளாசித் தள்ளினான். ஒரு கட்டத்தில் அடி தாங்காமல் நான் தரையில் விழுந்தேன்.
அர்பாபுவின் கோபமும் அடியும் எனக்கு உணர்த்தியது இதுதான். இந்த தண்ணீர் உனது பின்பக்கத்தை கழுவுவதற்காகதல்ல. அது என்னுடைய ஆடுகளுக்குரியது. இந்த தண்ணீரின் விலை உனக்குத் தெரியாது. இனிமேலும் இதுபோன்ற தேவையற்ற விஷயங்களுக்காக தண்ணீரைத் தொடாதே. மீறித் தொட்டால் தொலைத்துவிடுவேன் உன்னை.
மலம் கழித்துவிட்டு பின்புறம் கழுவுவது உலகமாக தவறு என்னும் முதல் பாடம். அங்கே எனக்கு இப்படித்தான் கற்பிக்கப்பட்டது.
நான் ஆற்றில் வளர்ந்தவன். தண்ணீரே என் வாழ்க்கை. சுத்தம் எனது உயிர் மூச்சு. என்னுடைய ஸைனு இரண்டு தடவை குளிக்காமல் இருந்தால்கூட எனக்கு அருவெருப்பாக இருக்கும்.
என் வேலையோ எப்போதுமே தண்ணீருக்குள்.

**குடும்ப நினைவு**

நான் தனிமையில் விடப்பட்டேன். தலைக்கு கீழ் வைத்திருந்த பைக்குள்ளிருந்த ஊறுகாய் நெடி காற்றிடில் பரவியது. குபுக்கென்று எனக்குள் வீட்டு நினைவு பீறிட்டது.
"அம்மா, ஸைனு, அவளுடைய வயிற்றில் வளரும் என் செல்ல மகன் (மகள்) எல்லோரும் நினைவில் வந்தார்கள். நான் இங்கே இப்படி அகப்பட்டுக்கொண்ட விபரம் தெரியாமல் அவர்கள் பெருங்குழப்பத்திலிருப்பார்கள். அதை நினைத்தபோது என் கண்களில் நீர்கோர்த்தது, மூச்சடைத்தது."
அவர்களிடம் எப்படி விபரம் தெரிவிப்பது? நான் வந்து சேர்ந்து விட்டேன். இங்கே சுகமாக இருக்கிறேன் என்றாவது.
அப்போது ஹக்கீம் என் நினைவில் வந்தான். பாவம், அவனுக்கு எப்படிப்பட்ட வேலைகளோ? இன்றைக்கு அவனை வெளியே எங்குமே பார்க்க முடியவில்லை.
எத்தனையோ கனவுகளுடன் விமான ஏறினானே இந்த இளம் பிராயத்திலேயே இப்படிப்பட்ட கொடுமைகளை அவன் எப்படித்தாங்குவான்.

**மனைவிடம் பேசுதல்**

"குஞ்ஞுக்கா என்னை அந்த அறையிலிருந்து வேறொரு அறைக்கு கூட்டிக் கொண்டுபோனார். அங்கே ஒரு டெலிபோன் இருந்தது. குஞ்ஞுக்கா என்னை அதற்கு முன்னால் கொண்டுபோய் இருத்தினார்."
ம்.... ஊருக்க கூப்பிடாண்டாமா? உம்மாவின் குரலையும், பீவியின் குரலையும் கேட்காண்டாமா?
நான் உடைந்து அழுதேன்.
என்னுடைய வீட்டில் டெலிபோன் இல்லை. நான் பக்கத்துவிட்டு டெலிபோன் நம்பரை குஞ்ஞுக்காயிடம் சொன்னேன்.
அத்தனை நாள்களில் ஒருமுறைகூட கூப்பிடாத அந்த டெலிபோன் நம்பர் எப்படி என் நினைவில் இருந்தது என்பது இன்று வரை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
குஞ்ஞுக்கா நீண்ட நேரம் அந்த போனுடன் மல்லுக்கட்டினார். கனெக்ஷன் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு முயற்சியில் மறுமுனையில் பெல்லடித்தது. நான் யார் என்பதை அந்த வீட்டுக்காரர்களிடம் சொல்லி புரிய வைப்பதற்குள் நான் படாத பாடு பாட்டுவிட்டேன்.
நான் யார் என்று புரிந்தபோது அந்தப் பக்கம் ஒரு நிமிடம் சத்தமே இல்லை. கனத்தம் மௌனம்.
இத்தனை காலமாக நீ எங்கிருந்தாய் நஜீப்? அவர்கள் கேட்டார்கள். என்ன பதில் சொல்வேன் நான்? என்னைப் பற்றி ஊரில் உலா வருவதற்கான வாய்ப்புள்ள கதைகளைப் பற்றி நான் நினைத்துப் பார்த்தேன்.
ஒரு பதினஞ்சு நிமிஷம் கழிச்சு கூப்பிடு நான் உன் பொஞ்சாதியக் கூட்டிக் கொண்டு வாரேன். அந்த பதினஞ்சு நிமிடத்திற்கு அதற்கு முன்னாலிருந்த மூன்றரை வருடங்களை விடவும் நீளம் அதிகமிருந்ததாக இப்போது எனக்குத் தோன்றுகிறது.
காத்திருந்து .. கா...த்..திருந்து இறுதியில் குஞ்ஞுக்கா மீண்டும் டெலிபோனை சுழற்றத் தொடங்கினார். பெல் அடித்தது.
நான் ஹலோ என்று ஸைனுவின் ஓவென்ற அலறல் சத்தம் என் காதுகளில் வந்து மோதியது.
அதன்பின் டெலிபோன் எங்கள் அழுகைச் சத்தம் மட்டுமே. அவள் என்னிடம் எதுவும் கேட்கவில்லை.
என் மனதை அவள் புரிந்திருக்க வேண்டும். சற்று நேரத்திற்குப் பின் அவள் அழுகையை அடக்கிக்கொண்டு சொன்னாள்; நம்முட நபீல் இந்த வருஷத்திலிருந்து நர்சரிக்கு போகத் தொடங்கியிருக்கிறான். அவன் பார்க்காண்டாமா? எப்போ வாரீய? மச்சான். பின்ன ஒரு விஷயம், உம்மா போய்ச் சேர்ந்துட்டாக. போன வருஷம். உங்களைப் பற்றி ஒரு தகவல்கூடத் தெரியாம நெஞ்சுடஞ்சு.
அதன்பின்பு எதையும் கேட்கும் சக்தி எனக்கில்லை.
நான் போனை கீழே வைத்தேன்.
என் நெஞ்சு அடைத்து. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு வாய்விட்டு அழுதேன். ஏ நஜீப் என்ன இது? நீ படாத கஷ்டமா? எல்லாவற்றையும் தாண்டி வந்தவன் தானே நீ? உனக்குத் தெரியாததா. எல்லாம் அந்த கடவுள் தருவதுதான்னு நினச்சுக்கோ.

**நம்பிக்கை**

நான் அந்த ஆட்டுக்குட்டியின் உடம்பிலும் முகத்திலும் படர்ந்திருந்த மாசியை கைகளால் வழித்து துடைத்தேன். ஆனால் தாய் ஆடோ என்னை விடவும் புத்திசாலியாக இருந்தது. அது ஒரு சில நிமிடங்களுக்குள் அந்த குட்டியின் உடல் முழுவதையும் தன் நாக்கால் நக்கி சுத்தப்படுத்திவிட்டது. இந்த அடுகள் தான் எத்தனை வேகமாக வளர்கின்றன. ஒரு நிமிடம்கூட கழிந்திருக்காது.
"அதுவொரு ஆண் ஆடு. அந்த கணத்தில் அதுவரை என்னைச் சுற்றியிருந்த மன இறுக்கங்களெல்லாம் அணை உடைத்த வெள்ளமாக வடிந்து போனது. ஒரு நொடிக்குள் என் மனம் என் ஊரை நோக்கி தாவியது. அதன் வேகத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது."
என்னுடைய சைனு கர்ப்பிணி. அவள் எந்த நிமிடமும் பிரசவிக்கலாம் என்ற நிலையில்தான் ஊரிலிருந்து நான் புறப்பட்டு வந்தேன். அதன்பின் அவளைப்பற்றி என்னால் எந்த தகவலையும் அறிய முடியவில்லை.

எனது சைனு என் மனைவி பிரசவித்திருக்கிறாள். அதுவும் நான் விரும்பியபடியே ஒரு ஆண் மகனை.
அந்த நம்பிக்கையில் நான் அப்போதுதான் பிறந்திருந்த அந்த ஆட்டுக்குட்டிக்கு ஒரு பெயர் வைத்தேன்.
நபீல்.
என் மகனுக்காக நான் பாதுகாத்து வைத்திருந்த பெயர்.
ஒரு சில நாள்களுக்குள்ளாகவே அந்த சின்னஞ்சிறு செடிகள் வளர்ந்து பெரிதாகி, பூ பூத்து, காய்த்து, எதிர்காலத்துக்காக தன் உயிரை பூமியின் கர்ப்பப்பையில் ஒளிந்து வைப்பதை நேரடியாகப் பார்த்தபோது, எனக்கு அவற்றின் மீது மிகுந்த வாஞ்சை தோன்றியது.
நான் அவற்றுடன் பேசினேன். அவற்றின் துயரக் கதைகளைக் கேட்டேன். என்னுடைய துயரங்களை அவற்றிடம் பகிர்ந்து கொண்டேன்.
அச்சின்னஞ்சிறு செடிகள் எனக்கு வாழ்க்கையின் நம்பிக்கை பாடங்களைக் கற்றுத் தந்தன.
அவை மிக ரகசியமாக என் காதில் கிசுகிசுத்தன.
நஜீப் இந்த பாலைவானத்தில் வளர்ப்பு மகனே, எங்களைப் போல நீயும் உன் உயிரை கையில் பிடித்துக்கொண்டு இந்த பாலைவனத்துடன் போராடு. தீக்காற்றும், வெயில் நாளங்களும் உன்னைக் கடந்து போகும்.
அவற்றிடம் நீ தோற்றுவிடாதே; போராடி சோர்ந்துவிடாதே. அவை உனது உயிரையே விலையாகக் கேட்கும் விட்டுக்கொடுத்து விடததே. இறந்தவனைப் போல் தியானத்தில் ஆழ்ந்துவிடு. முட்டாளைப் போல் நடி, மறுபடியும் நீ வீறுகொண்டு எழவே மாட்டாய் என நம்பவை. கருணை நிறைந்த அல்லாஹுவை மட்டும் ரகசியமாகக் கூப்பிடு. அவன் உன்னுடைய துயரத்தை அறிவான். அவனுக்கு உனது பரிதாபக் குரல் நிச்சயம் கேட்கும்.

**இறை நம்பிக்கை**

கருணாமயனான அல்லாவே! நீர் எத்தனையோ மனிதர்களின் வாழ்க்கையில் அற்புதங்கள் நிகழ்த்தியிருக்கிறீர்கள். தெருவில் பிச்சையெடுக்கும் ஒருவன் லாட்டரி விழுந்து ஒரு நாளிலேயே பணக்காரனாகி விடுகிறான். தீரா நோயால் அவஸ்தைப்படுபவன் ஒரு புலர்காலையில் குணமடைந்து வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறான்.
"பஸ்ஸுக்கடியில் விழுந்தவன் அரைந்து கூழாகி விட்டான் என்று நினைத்து கொண்டிருக்கும்போது, ஒரு கீறல்கூட விழாமல் வெளியே வருகிறான். விமானம் நொறுங்கி நூற்றுக்கணக்கானவர்கள் மரணமடைய அதில் ஒருவன் மட்டும் தப்பிப் பிழைக்கிறான். கப்பல் விபத்தில் அகப்பட்டவன் பல வருடங்களுக்குப் பிறகு கரைக்குத் திரும்பி வருகிறான். பூகம்ப இடிபாடுகளுக்கிடையே சிக்கிக்கொண்ட ஒருவன் ஒரு மாதத்துக்குப்பின் உயிரோடு எழுந்து வருகிறான்."
இவையெல்லாம் சாதாரண மனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள். அப்படியொரு அற்புதத்தை என் வாழ்க்கையில் நீ உருவாக்கித் தரமாட்டாயா?
நீ சற்றே மனம் கனிந்தால் போதும், புல் வண்டிக்காரன் தன்னுடைய வண்டியை எனக்காக நிறுத்துவான். தண்ணீர் வண்டிக்காரன் என்னை இங்கிருந்து கடத்திப்போய் பாதுகாப்பான ஏதோவொரு இடத்தில் கொண்டு சேர்ப்பான்.
ஏன்.... அர்பாபுவே மனம் திருந்தி என்னைத் திருப்பிக் கொண்டு விடுவான்.
தேவை உனதருள்..... அருள் மட்டுமே!

**எதிர்கொண்ட சவால்கள்**

அறிமுகமில்லாத அந்த மனிதரிடமிருந்துதான் நான் முதல் முதலாக அந்த அரபிச் சொல்லைக்கேட்டேன் – அர்பாபு.
"அர்பாபு! அர்பாவு! என் மனதுக்குள் அந்த சொல்லை நான் பல தடவை சொல்லிப் பார்த்தேன். கேட்பதற்கே மிக இனிமையாக இருக்கிறதே? யார் அந்த அர்பாபு? அவர் எப்படி இருப்பார்? என்ன செய்கிறார்? எப்படியிருந்தாலும் அந்த அர்பாபு வந்தால்தான் எங்களால் போக முடியும்."

ஐயா அர்பாபு! நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள் வேகமாக வாருங்கள் எத்தனை நேரமாகத்தான் நாங்கள் இங்கேயே காத்துக் கொண்டிருப்பது, வாருங்கள். இந்த இருட்டிலிருந்து எங்களை வெளியே கூட்டிக்கொண்டு போங்கள். இரண்டு மணி நேரத்துக்கும் மேலாகியிருக்க வேண்டும். கையில் கிடந்த ஒரே வாட்சையும் கழற்றி சகியிடம் கொடுத்துவிட்டு வந்திருந்ததால் நேரம் என்ன என்று சரியாகத் தெரியவில்லை. விமான நிலையத்தை ஒரு சுற்று சுற்றி மணி பார்க்கலாம் என்றால் அதற்கும் தைரியம் இல்லை.
நாங்கள் ஒரு பக்கம் போக. அர்பாபு இந்தப் பக்கம் வந்துவிட்டால் என்ன செய்வது? விமான நிலையத்துக்கு வெளியே நகரம் இரவுக்குள் பிரகாசிக்கத் தொடங்கியது. எங்களுக்குள் மெல்லிய நடுக்கம் பரவ ஆரம்பித்தது. வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு ஓர் அரபி அதிலிருந்து வெளியே குதித்தான். ஏனோ தெரியவில்லை அவனைப் பார்த்ததும் நாங்கள் காத்துக்கொண்டிஐந்த அர்பாபு இவர்தான் என்று என் உள்ளுணர்வு சொன்னது. அப்துல்லா என் பக்கமாக கை நீட்டிக் கேட்டான் அவன். இல்லையென்று நான் தலையாட்டினேன்.
எங்களைப் போலவே தனியாக நிற்பவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பாஸ்போர்ட்டை வாங்கி பரிசோதித்தவன் கடைசியாக மீண்டும் எங்களிடமே வந்தான். வந்தவன் என் கையிலிருந்த பாஸ்போர்ட்டை பறித்துப் பார்த்தான் பின்பு, ஹக்கீமின் பாஸ்போர்ட்டையும் பறித்துக்கொண்டு எதுவுமே பேசாமல் வேகமாக நடக்கத் தொடங்கினான்.

**நான் கண்ட கல்ஃப்**

நான் கனவில் பார்த்திருந்ததைவிடவும் அதி அற்புதமான மாயாபுரியாக இருந்தது என்னுடைய கல்ஃப்.
"அன்றைய அரபி உலகம் இப்போதைப்போல டி.வி.யிலோ சினிமாவிலோ அத்தனையொன்றும் பிரபலமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு முன்னால் கல்ஃபுக்கு வந்து போனவர்கள் சொன்ன கதைகளைக் கேட்டுத்தான் அந்த உலகத்தைப் பற்றி எனக்குள்ளேயே ஒரு கற்பனை வடிவத்தை உருவாக்கி வைத்திருந்தேன். ஆனால் நான் நேரில் கண்ட ரியாதோ எனது கற்பனையையும் தாண்டி மிகக் கவர்ச்சியாக இருந்தது அங்கே நான் பார்த்த ஒவ்வொரு காட்சியுமே எனக்கு புதுமையாகத் தெரிந்தது."
பம்பாய் எனக்கு ஒருவித எதிர்பார்ப்பளித்ததென்றால், ரியாத் எனக்கு அற்புதமூட்டியது. ஆனாலும் என்னால் இந்த அற்புத உலகத்தை நீண்ட நேரம் ஆசை தீரப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை.

**அவல நிலை**

"என் நண்பர்களின் துயரத்தைக் குறைத்து மதிப்பிட நான் விரும்பவில்லை. ஒவ்வொருவருக்குமே அவரவர் கடந்துவந்த பாதை மிகக் கடினமானதுதான். வாழ்க்கையில் அவர்கள் இழந்தவற்றை வேறெவராலுமே ஈடு செய்ய முடியாது."
வேறு சிலருடைய துயரக் கதைகளைக்கேட்ட போது என்னுடைய கஷ்டங்கள் மிக அற்பமானவையாக எனக்குத் தோன்றியது. எனக்கு என்னுடைய சொந்த துயரத்திலிருந்து வெளியேற பெரிதும் உதவியாக இருந்தன.
இப்படியொரு கதையை உங்களிடம் எடுத்துச் சொல்லும் அளவுக்கு வாழ்க்கை மீது எனக்கு பிடிப்பு ஏற்பட என்னைத் தூண்டியவை ஜெயிலில் நான் கேட்ட அந்த கதைகள் தான் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இல்லையென்றால் எனது துயரத்தின் சுமை தாங்காமல் ஒரு வேளை நான் தற்கொலை கூட செய்திருப்பேன். எப்படிப்பட்ட துயரத்திலிருந்தும் கரையேறுவதற்கான ஒரே வழி நம்மை விடவும் அதிக துயரம் அனுபவித்தவர்களின் கதையைக் கேட்பதுதான்.

**மனிதநேயம்**

"நான் இப்போதுதான் முதன் முதலாக கல்ஃபுக்கு வருகிறேன் என்று கூடவா அவர்களுக்கு தெரியாது. நீ சாப்பிட்டாயா? உனக்கு தாகமாக இருக்கிறதா? பசிக்கு ஏதாவது வேண்டுமா? என்று எங்கே போய் தங்குவது? என்னுடைய சக பணியாளர்கள் எவரையுமே அறிமுகம் செய்து வைக்கவில்லையே இதுவா நான் அரபிக் கதைகளில் கேட்டிருந்த விருந்தோம்பல்."

என்னுடைய அர்பாபுக்களே! நீங்கள் ஏன் இப்படி பாராமுகமாக இருக்கிறீர்கள். ஐயா எஜானர்கள் என்னை ஏமாற்றி விடாதீர்கள். நீங்கள் தான் என்னுடைய வாழ்க்கை. நீங்கள் தான் எனது கனவு. நீங்களே எனது எதிர்காலம்.

நான் ஒற்றைக் கையுடன் மஸராவை நோக்கிப் போனேன். மதியத்தோடு கையில் வலி சற்றே குறைந்திருப்பதைப்போலத் தோன்றியது. ராத்திரியுடன் வலி பூரணமாகக் குறைந்துபோனது. இரண்டு நாள்களுக்குள் கையிலும், நெஞ்சிலும் போட்டிருந்த நீர்வற்றிவிட்டது. ஒரு வாரத்துக்குப் பின் கைகட்டுகளை அவிழ்த் தெடுத்தேன்.

இத்தனை நாள்களாக நான் ஒற்றைக் கையுடனேயே எல்லா வேலைகளையும் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் ஒரு நாள் கூட ஆடுகள் என்னை காலால் உதைக்கவில்லை. கோபத்துடன் முட்டவில்லை. பால் பாத்திரத்தை தட்டிவிடவில்லை என்பதை நினைத்து நான் ஆச்சரியப்பட்டேன். இப்படி ஆடுகளிடமும் மனிதநேயம் இருப்பதை உணரமுடிகிறது.

ஏ அல்லா, நீ என் இரண்டு தோழர்களையும் பாலைவனத்தில் வைத்யத பறித்துக் கொண்டாள். ஹக்கீமை நீர் வற்றி வரண்டு போகச் செய்தாய். இப்ராஹிமை காற்றோடு கற்றாக கரைத்துக் கொண்டு போய்விட்டாய். இப்போது என்னை இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறாய். இனியும் இந்த பாவத்திடம் என்ன வேண்டும் உனக்கு சொல். அந்தக் கேள்வி விடை தெரியாமல் எனக்குள்ளேயே உறைந்து போனது.

நிமிடங்கள் நடுப்பகலுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. அவ்வப்போது சில வண்டிகள் மட்டுமே என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தன.

அப்போது தொலைவில் ஒரு சொகுசுக் கார் சீறிப் பாய்ந்து வருவதைப் பார்த்தேன். அதற்கு கை காட்டுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. லாரிக்காரர்கள்கூட தலையை வெளியே நீட்டி ஒரு பரிதாப பார்வையை எனடமீது வீசிவிட்டு போகும்போது இந்தச் சொகுசுக்காரா எனக்காக நிற்கப்போகிறது?.

ஆனாலும் ஏதோவொரு உள்ளுணர்வு நான் அந்தக் காரைப் பார்த்து அனிச்சையாய் கை காட்டினேன். அதுவும் என்னைக் கமந்து போனது. ஆனால் அது என்ன? என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. என்னைக் கடந்து போன கார் சற்று தொலைவில் பிரேக் அடித்து நிற்கிறது. நான் கை காட்டியதைப் பார்த்துதான் அது நின்றதா? இல்லை வேறு ஏதாவது காரணமா?

ஒரு நிமிடம் திகைத்து நின்ற நான், பின் அந்தக் காரை நோக்கி வேகமாக ஓடினேன். வண்டிக்குள் நாகரிகமாக உடையணிந்த ஒரு அழகிய அரபி. கண்ணாடியை இறக்கிக் கொண்டே அவர் என்னிடம் ஏதுவோ கேட்டார். என்ன பதில் சொல்வது? எனக்கு எதுவும் புரியவில்லை. இல்லையில்லை... சொல்வதற்கு என்னிடம் எதுவுமேயில்லை.

கருணை நிறைந்த அரபியே, நேற்றிலிருந்து எத்தனை வண்டிகள் என்னைக் கடந்து போயிருக்கின்றன. அவற்றில் ஒன்றுகூட எனக்காக பிரேக் போடவில்லை. என் பக்கத்தில் நிறுத்தி நீ யார்? உனக்கு என்ன வேண்டும்? நீட எங்கிருந்து வருகிறாய்? என்று ஆறுதலாக ஒரு கேள்விகூட கேட்கவில்லை. என்னைப் பார்த்ததும் உங்களுக்கு மட்டும் பிரேக்கில் கால் அழுத்த ஏன் தோன்றியது? அது நான் செய்த புண்ணியம்தான் போதும்... எனக்கிது போதும்.

நான் கண்ணீர் விட்டு அழுதேன்.

எனக்கா கார் கதவை திறந்து விட்டவர். வலுக்கட்டாயமாக என்னை பின் சீட்டில் ஏற வைத்தார். கார் ஒரு சீறலுடன் பாயத்தொடங்கியது. அந்தச் சொகுசுக் காரின் வழுவழுப்பான சீட்டில் அழுக்கடைந்த என் உடம்பை சாய்க்கவே எனக்கு கூச்சமாக இருந்தது. அதனால் நான் அந்த சீட்டின் விளிப்பில் ஒட்டியும் ஒட்டாமலுமாக உட்கார்ந்திருந்தேன்.

வண்டி கொஞ்ச தூரம்தான் போயிருக்கும். அப்போது காரின் ஏ.ஸி.யை ஆஃப் செய்த அரபி, கார் கண்ணாடிகளை மெதுவாக கீழிறக்கிவிட்டார். என் உடம்பிலிருந்து கிளம்பிய வீச்சமே அதற்கு காரணம் என்று எனக்குப் புரிந்தது. அவர் நினைத்திருந்தால் அப்போதே என்னை காரிலிருந்து இறக்கிவிட்டிருக்கலாம். ஆனால் அவரிடமிருந்த ஒரு அலட்சியப் பார்வையைக்கூட நான் பார்க்கவில்லை. அந்த மகானிடம் நான் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டேன்.அவர் ஒரு தண்ணீர் நிரம்பிய பாட்டிலை என்னிடம் நீட்டினார். அதை நான் ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்தேன். இன்னமும் வேண்டுமா? அவர் பரிவுடன் மீண்டும் கேட்டார். நான் ஆமாம் என்று தலையசைத்தேன். மீண்டும் ஒரு பாட்டில் தண்ணீர். நான் அதையும் மடக் மடக்கென்று குடித்துத் தீர்த்தேன் என்றாலும் என் தாகம் அடங்கவில்லை.

ஆனால் மீண்டும் ஒரு தடவை அவரிடம் தண்ணீர் கேட்க எனக்கு தயக்கமாக இருந்தது. நான் சீட்டில் மெதுவாக முதுகை சாய்த்தேன். காரின் வேகத்துடன் என் களைப்பும் சேர்ந்து கொள்ள வெகு விரைவிலேயே நான் உறங்கிப் போனேன். அதனால்தான் அந்தப் பயணம் எத்தனை நீண்டது என்று என்னால் அனுமானிக்கவே முடியவில்லை.

இருள் கவிந்து கொண்டிருந்தபோது கார் ஒரு நகரத்துக்குள் நுழைந்தது. அதன் பிரேக் குலுக்கலில் திடுக்கிட்டு கண் விழித்த நான் சுற்றும் முற்றும் திகைப்புடன் பார்த்தேன். பெரிய பெரிய கட்டிடங்கள் எங்கே பார்த்தாலும் ஆட்கள். அரபி திரும்பி என்னைப் பார்த்தார். இறங்கிக் கொள் என்பதற்கான அடையாளம் அது என்று எனக்குப் புரிந்தது. அத்தனை நேரமாக என்னை சகித்துக்கொண்ட அந்த மகானுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்? அந்த பரந்த மனத்திற்கு பரிசாக ஒரு துளி கண்ணீரையே என்னால் கொடுக்க முடிந்தது. நான் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. காரணமேயில்லாமல் நான் கேவிக் கெவி அழுதேன். பணக்காரனின் வண்டியிலும் சில வேளைகளில் அல்லா பயணம் செய்வார் என்று எனக்கு அப்போது தான் புரிந்தது. அவர் மிக்க மனிதநேயத்துடன் நடந்துக்கொண்டது மிகுவும் பெருமைப்படக்கூடியது.

**தெய்வ நம்பிக்கை**

அஸர் தொழுகைக்கான பாங்கு முழங்குத் தொடங்கியது. படுத்தருந்திருந்தவர்களெல்லாம் சோம்பலுடன் எழுந்தார்கள். அவர்களுடன் நாங்களும் சேர்ந்து கொண்டோம். அந்த பிளாக்கிற்குள்ளேயே ஒரு தனி மூலை தொழுகைக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு முண்டியடித்த கூட்டத்திற்குள் நாங்களும் கருணைமயமான அல்லாஹுவைத் தொழுவதற்காக கஃஅபாவை நோக்கி மண்டியிட்டோம். பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மான் னிர் ரஹீம்.

அந்த பிரார்த்தனையில் கடந்து போன நாள்களில் நான் அனுபவித்த எல்லா துயரங்களும் ஒரு நதி போல் என்னைவிட்டு விலகிச் செல்வதாக நான் உணர்ந்தேன். அந்த நெருக்கடிகளிலிருந்தெல்லாம் என்னைக் காத்து அரவணைத்த கருணை நிறைந்த அல்லாஹுவின் அன்பை நினைத்து நான் கதறி அழுதேன்.

காலையில் சூரியன் உதித்தான். சுதந்திரமான புத்தம் புதிய சூரியன். புது வாழக்கைக்குள் உதித்து வந்த செங்கதிர். இப்ராஹிம் கூப்பிடும் சத்தம் கேட்டுத்தான் நான் கண் விழித்தேன். அந்த அளவுக்கு நாங்களிருவரும் உறக்கம் என்னும் நீர்ச் சுழலுக்குள் சிக்கிப்போயிருந்தோம்.

ஒரு நிமிடம் நான் மஸராவில் இருப்பதாக நினைத்துவிட்டேன். கூப்பிடுவது அர்பாபுதான் என்று நினைத்து திடுக்கிட்டேன். ஆனால் கண்ணைத் திறந்தபோது... என் முன்னால் மஸரா இல்லை. ஆடுகள் இல்லை, ஒட்டகங்களில்லை அர்பாபு இல்லை, கூடாரமில்லை.

நான் அவசர அவசரமாக ஹக்கீமை தட்டியெழுப்பினேன். ஹக்கீம்... இங்கே பார்த்தாயா... நாம இப்போ எங்கே வந்திருக்கோம் என்று நரகத்தின் நாட்களெல்லாம் முடிந்து போய்விட்டன. இனி வேதனைகளில்லை. இனி என்றென்றைக்கும் நாம் சுதந்திர மனிதர்கள். நாங்கள் அந்த வண்டிப்பாதையைத் தொடருவதென்று தீர்மானித்தோம். அது நிச்சயமாக எங்களை வாழ்க்கையின் மறுமுனைக்கு கொண்டுபோய் சேர்த்துவிடும் என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். இது விடுதலைக்கான வழிகாட்டிதான், சந்தேகமேயில்லை!. இதுவே எங்களுடைய நம்பிக்கை.

**கற்பனை உலகம்**

எத்தனை கனவுகள்...! ஏசி கார், ஏசி அறை, நுரை மெத்தை அதற்கு பக்கத்தில் டி.வி.... இப்போதைய என் நிலைமையில் சிரிப்பதைத் தவிர வேறென்ன செய்வது?

வேறெந்த கல்ஃபீப் மலையாளிக்கும் தனது வாழ்க்கையில், கனவுக்கும் வாழ்க்கைக்கும் இடையில் மிகப்பெரும் இடைவெளி உண்டென்றுமட அத்தனை சீக்கிரம் புரிந்திருக்காது. அப்படியாக கல்ஃபில் எனது முதலிரவு பரிகாசமும், பரிதாபமும் நிறைந்ததாக முடிந்தது. ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான ஆடுகள் துள்ளிக் கொண்டு கனைத்தபடியும் அங்குமிங்குமாக ஓடும் சத்ததைக் கேட்டு நான் கண்விழித்த போது விடிந்திருந்தது. நல்ல வெளிச்சம் ஆனாலும் வெயில் ஏறியிருக்கவில்லை.

நான் மணலிலிருந்து மெதுவானக எழுந்தேன். உடம்பு முழுவதும் ஒரே வலி. பாலைவனக் குளிர் தாங்காமல், ராத்திரி என்னையுமறியாமல். எப்போதோ நான் பையைத் திறந்து ஒரு போர்வை எடுத்து போர்த்திருயிருக்கிறேன். அது மண்ணில் சுருண்டு கிடக்கிறது. கட்டிலில் ராத்திரி பார்த்த பயங்கரனை காணவில்லை. அது என்னுடைய இரவு நேரக் கனவுதானோ என்னவோ? இவ்வாறு கற்பனை உலகத்தில் வாழ்ந்தேன்.

**சைனுக்கு கடிதம் எழுதுதல்**

நான் எழுதும் முதல் கடிதம் இது. எப்படியெழுதவேண்டும் என ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் மனத்திற்குள் ஒளிந்திருந்த விஷயங்கள் ஒவ்வொன்றாக வெளியே வந்து விழுந்தன்.

எனக்கு மிகவும் பிரியப்பட்ட சைனு.

நான் இங்கு நல்ல சுகமாக வந்துசேர்ந்தேன். ஆனால் வேலைநெருக்கடியால் என்னால் ஒரு கடிதம்கூட எழுத முடியவில்லை. நீ அங்கே கவலைப்படாதே. உன்னுடைய ஆசை மச்சான் இங்கே நல்ல சுகமாக இருக்கிறேன். பாலும், கம்பளியும் தயாரிக்கும் ஒரு பெரிய கம்பெனியில்தான் எனக்கு வேலை நல்ல கௌரவமான பதவி.

"நாம் எதுவுமே செய்ய வேண்டாம் எல்லாம் மிஷின்கள்தான். நான்தான் சூபர்வைசர். என்னுடைய அர்பாபுக்கு என்மேல் மிகுந்த மரியாதை. என்னுடைய வேலை அவருக்கு பிடித்திருக்கிறது இடையிடையே அவர் எனக்கு நல்ல வெகுமதிகள் தருகிறார். பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு இடத்தில்தான் என்னுடைய தங்கும் அறை இருக்கிறது." என்னுடைய கட்டிலில் இருந்து பார்த்தால் வெகு தொலைவிலுள்ளவற்றைக்கூட பார்க்கலாம். அந்த அளவுக்கு வசதியான இடம் இது.

சாப்பாட்டைப் பற்றி சொல்லவே வேண்டாம். இதுவரை நான் சாப்பிட்டே பார்க்காத விதவிதமான பதார்த்தங்களை அர்பாபு எனக்கு வாங்கித் தருகிறார். இப்போதுகூட குபூஸும், சிக்கன் கறியும். மட்டன் மசாலாவும் சாப்பிட்டுவிட்டு, ஒரு டம்ளர் கெட்டிப் பாலும் குடித்துவிட்டுதான் இந்தக் கடிதம் எழுத உட்கார்ந்தேன்.

இத்தனை நாள்களில் நான் சற்றே குண்டாகி விட்டது போல் தோன்றுகிறது, இப்போ பகல் ஓய்வு வேளை. கெஞ்ச நேரம் கழித்து வேலைக்குப் போனால் போதும். அதுவரையிலும் நல்ல ஆனந்தமான காற்றை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

நம்முடைய ஊர்க்காரர்கள் சிலரும் இங்கே என்னுடன் வேலை பார்க்கிறார்கள். ராவுத்தர், ராகவன், விஜயன், போக்கர் என்று சிலர். நான் அவர்களுடன் அதிகமாக பேசுவது கிடையாது அர்பாபுக்கு அது பிடிக்காது.

அர்பாபுக்கு அழகான ஒரு மகள் இருக்கிறாள். சாயங்கால நேரங்களில் நான் அவளுடன் நடக்கப்போவேன். நான்தான் அவளுடன் போகவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பாள். அவள் பெயர் மேரி மைமூன்.

வேறு விசேஷங்கள் எதுவும் இல்லை. அங்கே நீயும், உம்மாவும் சுகமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நேரம் கிடைக்கும்போது எழுதுகிறேன்.

இப்படிக்கு,

உன் ஆசை மச்சான் நஜீப்.

பேப்பரை மூடி விட்டு, நான் கண்ணீர் விட்டு அழுதேன்.

அந்தக் கடிதமல்ல, அந்த அழுகைதான் உண்மையானது.

அது எவருமே படித்துப் பார்க்காத ஒரு உண்மை

நஜீப் தன் கவலைகளை வெளிக்காட்டிக் கொள்ளலாம் மனத்திற்கு வைத்துக் கொண்டும் தன் வேதனைகளை மறைத்துக்கொண்டு தன் மனைவிக்கு கடிதம் எழுதுகிறான்.

**ஹக்கீம் நினைவு**

திடீரென்று எனக்குள் அந்த நினைப்பு வந்தது. என்னுடைய ஹக்கீமை ஒரு தடவை போய்பார்த்தால்தான் என்ன? அன்றிரவு வண்டியிலிருந்து இறங்கிப்போனவன்தான். அதன்பின் இன்றுவரை அவனைப் பார்க்கவில்லை. ஒரு பரிதாப ஜீவன் அவன்.

அந்தக் கொட்டும் மழையிரவில் நான் ஹக்கீமின் மஸராவை நோக்கி நடந்தேன். இரும்புத் தாழ்ப்பாள் போட்டிருந்த அந்த பெரிய கேட்டில் நான் சந்தேகத்துடன் தட்டினேன். பயம் ஒரு பக்கம் என்றாலும் நான் உரத்த குரலில் கூப்பிட்டேன்.

"ஹக்கீம்... ஹக்கீம் ... நான் கூப்பிடுவது உனக்கு கேட்கிறதா...? இது நான்தான்.... நஜீப் உன்னோடு கல்ஃபுக்கு வந்த நஜீப்... நீ எங்கிருக்கிறாய்?"

நெடுநேரமாக கேட்டை குலுக்கிக் கூப்பிட்டுப் பார்த்தேன். ஒரு பதிலும் இல்லை. நிராசையோடு நான் திரும்பி நடக்க ஆரம்பித்தபோது கம்பி வேலிக்கு அருகே ஏதோ நிழலாட்டம் தெரிந்தது.

"ஹக்கீம்.... இது நீதானா? நான் நஜீப்."

நான் அலறினேன். மழையின் இரைச்சலில் என் அழைப்பு கேட்காமல் போய்விட்டால் என்ன செய்வது. அந்த நிழல் மெதுவாக என் பக்கமாக நகர்ந்து வந்தது.

"ஹக்கீம்... இது நீதானா...? வாடா இங்கே வா... நான்தான் நஜீப்"

அந்த உருவம் எனக்கு அருகில் வந்துவிட்டது. நான் கண்களை இடுக்கிக் கொண்டு அதைக் கூர்மையாக உற்றுப்பார்த்தேன். கறுத்து மெலிந்து, ஜடாமுடியுடனிருந்த மற்றொரு பயங்கரன்.

இவன் எனது ஹக்கீம் இல்லை. அவன் இப்படியிருக்க மாட்டான். நல்ல துறுதுறுவென்றிருப்பான். ஆள் நல்ல சிகப்பு, அழகன் அந்த பிராயத்துக்குத் தகுந்த திராணியான உடல்வாகு. பம்பாய் வைத்து நீ இனி இங்கேயே இருந்துவிடு. ஹிந்தி சினிமாவில் ஏதாவது சான்ஸ் கிடைத்தாலும் கிடைக்கும் என்று அவனை நான் கிண்டல் செய்திருக்கிறேன்.

புரியாத ஏதோவொரு மொழியைக் கேட்டதைப்போல் அந்த பயங்கரன் கேட்டுக்கு மறுபக்கத்தில் எனக்கு நேராக வந்து மலங்க மலங்க விழித்தான்.

நான் எதிர்பார்க்காத ஒரு கணத்தில் திடீரென்று கேட்டின் மீது மடார் மடார் என்று தன் தலையை முட்டி, பெருங்குரலெடுத்து அவன் அழத் தொடங்கினான்.

நான் பயந்தேபோனேன். அந்த அழுகைக்கிடையே எப்போதோ 'என்னுடைய நஜீபண்ணா' என்றொரு அவலக்குரலும் கேட்டது.

அப்போதுதான் அது ஹக்கீம் என்று எனக்குப் புரிந்தது. ஒரு போதுமே கண்டுபிடிக்க முடியாதபடிக்கு மனித உடலின் வரைபடத்தை அப்படியே மாற்றி வரைக்க சந்தர்ப்பங்களால் முடியும் என்று எனக்கு புரிந்த கணம் இது.

**முடிவுரை**

புதின ஆசிரியரான பென்யாமின் சமுதாய முன்னேற்றத்தை தமது குறிக்கோளாகக் கொண்டவர். அவ்வகையில் ஆடு ஜீவிதம் என்ற புதினம் சமுதாய முன்னேற்றத்திற்கு பயன்படக்கூடியதாக உள்ளது. இளைஞர்களின் உழைப்பாலும், தன்னம்பிக்கை உள்ளத்தாலும் முற்போக்கு சிந்தனையாலும் ஓர் இளைஞன் எவ்வாறு உயர்வடை கின்றான் என்பதை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

ஆடு ஜீவிதம் என்னும் புதினம் நஜீப்பை மையப்படுத்திய சமுதாயப் புதினம். ஒரு புதினத்தை ஆய்வு செய்யும்போது அதன் கதையினை ஆராய்வது இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாய்வின் முதல் இயலில் நாவலின் தோற்றமும் வளர்ச்சி நாவல்கள் பற்றிய அறிஞர்கள் கருத்த சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. ஆடு ஜீவிதம் புதினத்தின் கதைச்சுருக்கம் இரண்டாவது இயலில் விரிவாக தரப்பட்டுள்ளது.

பாத்திரப்படைப்பு என்ற இயலில் அறிஞர்களின் கூற்று பாத்திரப்படைப்பின் இன்றியமையாமை, பாத்திரப்படைப்பு, படைபாளனும் பாத்திரத்தின் வளர்ச்சி, பாத்திர எண்ணிக்கை, பாத்திர முன்மாதிரி, பாத்திரப் பெயர், பாத்திர அறிமுகம் பாத்திரங்களை பகுக்கும் முறை முதன்மை பாத்திரங்கள், துணைப் பாத்திரங்கள், சிறுபாத்திரங்கள் என்ற தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது.

புதின மாந்தர்கள் பலரும் பல்வேறு குணநலன்களின் வெளிப்படையாக அமைந்துள்ளதையும் பாத்திரப் படைப்பின் மூலமாக புதின ஆசிரியர் பல்வேறு அனுபவங்களை படைத்துக் காட்டியுள்ளதையும் , பாத்திர வளர்ச்சிகளால் படைப்பாக்க உத்திகளையும் சிறப்புடன் அமைந்துள்ளதையும், வெளிப்படுத்தும் தன்மையிலும் இவ்வியல் ஆராய்ந்துள்ளது.

சமுதாயச் சிந்தனைகள் என்ற இயலில் சமுதாயம் குடும்பச்சுமை இளைஞர்களின் முன்னேற்றம், காதல், வெற்றி உழைப்பினால் உயர்வு, சிக்கல்கள், தன்னம்பிக்கை, ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

**முதன்மை நூல்**

பென்யாமின்.,**ஆடு ஜீவிதம் (சமூக நாவல்)** ,உயிர்மை பதிப்பகம், சென்னை, மு.ப.2010.

**துணை நூல்கள்**

அகிலன்.,**கதைக்கலை,** பாரிப் புத்தகப் பண்ணை, சென்னை,1967.

இளம்பூரணர் (உரை.ஆ)., **தொல்காப்பியம்,**கௌரா ஏஜென்சீஸ், திருச்சி.

கைலாசபதி. க., **தமிழ் நாவல் இலக்கியம்,** குமரன் பப்ளிக் ஹவுஸ் , சென்னை,மு.ப.1968.

ஞானசம்பந்தன். அ.ச.,**இலக்கிய கலை,** கழக வெளியீடு, சென்னை – 17

ஞானமூர்த்தி.தா.ஏ.,**இலக்கியத் திறனாய்வியல்,** ஐந்திணைப் பதிப்பகம்,சென்னை.மு.ப. 1990.

தண்டாயுதம்.இரா.,**சமூக நாவல்கள்,** பிரேம் பிரஸ், சென்னை.

திருமலை.ம. **தமிழ் மலையள நாவல்கள் ஒப்பாய்வு,**மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.1987.